பக்கங்கள் : 16+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 29 திங்கட்கிழமை (13.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :106

★ யுத்த நிறுத்த உடன்பாட்டை ஏற்கமுடியாது என அறிவிக்க வேண்டும்

★ அனுசரணைப் பொறுப்பிலிருந்து நோர்வேயை அகற்றவேண்டும்

# அரசுக்கு ஜே.வி.பி. காலக்கெடு

# அதை நிராகரித்தார் ஜனாதிபதி!

## அடுத்த சுற்றுப் பேச்சு வரை அவகாசமாம்

கொழும்பு,மார்ச் 13

**★ அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாட்டை தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது என அரசு அறிவிக்க வேண்டும்.**

**★ அனுசரணைத் தரப்பிலிருந்து நோர்வேயை இலங்கை அரசு அகற்ற வேண்டும்.**

**- இந்த இரண்டு விடயங்களையும் அடுத்த சுற்றுப்பேச்சுக்கு முன்னர் நிறைவேற்றுவதற்கு அரசுக்குக் காலக்கெடு விதித்திருக்கிறது ஜே.வி.பி.**

**ஆனால், இந்தக் காலக்கெடு விதிப்பை ஏற்க மறுத்து நிராகரித்துவிட்டார் அரசுத் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.**

ஜனாதிபதி மஹிந்தவின் அரசில் பிரதான பங்காளிக் கட்சியாகவும் அரசுக்கு ஆதரவு வழங்கும் தரப்பாகவும் இருந்துவருகிறது ஜே.வி.பி.

அக்கட்சியின் தயவில்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு நாடாளுமன்றில் பெரும்பான்மையை இழந்துவிடாமல் தப்பிப் பிழைத்து வருகின்றது.

இந்நிலையில், அக்கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும், பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றில் உரையாற்றும்போது, இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் முயற்சியில் அனுசரணைத் தரப்பாக நோர்வே நீடிக்கக்கூடாது; நீடிக்க அனுமதிக்கமுடியாது எனத் திடீர் அறிவிப்பு ஒன்றை விடுத்தார்.

நாட்டின் இறைமைக்கும், தேசியப் பாதுகாப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் - அரசமைப்புக்கு முரணான விதத்தில் - அமைந்துள்ள யுத்தநிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் அவர் அறிவித்தார்.

ஜே.வி.பியின் உயர்பீடமான அரசியல் குழு அடுத்த நாள் கூடி இந்த விடயங்கள் குறித்து ஆராய்ந்தது எனத் தெரிகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் வருகை

கொழும்பு,மார்ச் 13

குடாநாட்டில் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் பின்னரான நிலை தொடர்பாக ஆராய அமெரிக்கத் தூதரக உயர் மட்டக் குழு எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகப் பிரதிநிதிகள்,மனிதநேய ஒன்றியத்தின் பிரதிநிதிகள், நீதிக்கும் சமாதானத்திற்குமான நல்லெண்ணக் குழுப் பிரதிநிதிகள் மற்றும் யாழ்ப்பாண அரச அதிபர் ஆகியோரையும் மீனவ அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட தொழிலாளர்கள் அமைப்பு பிரதிநிதிகளையும் இக்குழு சந்தித்து உரையாடவுள்ளதாக [illegible]றிய முடிகின்றது. (3)

## யாழ்.பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் புதன்கிழமைமுதல் முழு அளவில் தொடங்கும்

### சகல வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

யாழ்.பல்கலைக்கழகத்தின் சகல துறைகளையும் சேர்ந்த அனைத்து வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் எதிர்வரும் புதன்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன. பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் அன்று தொடக்கம் முழு அளவில் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இதனை நேற்று அறிவித்திருக்கின்றது.

பல்கலைக்கழகச் சூழலில் இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்து மாணவர்கள் பாதுகாப்பான சூழலில் கல்வி கற்க முடியாத நிலைமை உருவானதை அடுத்து கடந்த இரு மாத காலமாக விரிவுரைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

எனினும், பின்னர் நிலைமை ஓரளவு

(14ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச்சுடர்

இன்று :- கணக்கீடு II பகுதி II வினாப்பத்திரம், கணக்கீடு I பகுதி II, கணக்கீடு II பகுதி I விடைக் குறிப்பு

நாளை :- இந்து நாகரிகம், பொருளியல் வினாத்தாள்கள்

## பதில் துணைவேந்தராக மோகனதாஸ் நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ். பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டிருக்கிறார். எனினும், அவரது நியமனத்துக்கு பல்கலைக்கழக மாணவர் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் முழுப் பாதுகாப்புடன் கச்சதீவுக்குச் சென்றார் டக்ளஸ்!

யாழ்ப்பாணம்,மார்ச்13

நேற்று நடைபெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதித் திருவிழாவில் அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டார்.

கடற்படையினரின் முழுப் பாதுகாப்புடன் கச்சதீவுக்குச் சென்ற அவர் அங்கு பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டபின் ஆலயகுருமார் மற்றும் அதிகாரிகளுடன் உரையாடினார்.

பலாலி படைத் தளத்தில் இருந்து விசேட ஹெலிகொப்டரில் நெடுந்தீவுக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் பின்னர் அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் கடற்படைப் படகு ஒன்றில் கச்சதீவுக்குச் சென்றடைந்தார்.

அமைச்சரின் வருகையை ஒட்டி கச்சதீவில் கடற்படையினரது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய ஈ.பி. டி.பி. உறுப்பினர்களும் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் மீன்பிடித் தடை இன்று முதல் தளர்த்தப்படுகிறது

யாழ்ப்பாணம்,மார்ச் 13

தொண்டைமானாறு முதல் வல்வெட்டித்துறை வரையான கடற்பகுதியில் விதிக்கப்பட்ட மீன்பிடித்தடைஇன்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

சிதம்பராக் கல்லூரியில் நேற்றுக் காலை கூட்டப்பட்ட கூட்டத்தில் இந்த விவகாரம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இராணுவ, கடற்படை அதிகாரிகளும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

படையினரின் அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்த மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட அனுமதிக்கப்படுவர் என்றும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு சென்ற பக்தர்கள் எட்டுப் பேர் அங்கிருந்து தமிழகத்துக்குத் தப்பினர்!

### கடற்படையின் கட்டுக்காவலையும் மீறி

கச்சதீவு,மார்ச் 13

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக நெடுந்தீவிலிருந்து படகில் சென்றவர்களில் எட்டுப் பேர் அங்கிருந்து தமிழகத்துக்குத் தப்பிச்சென்றுவிட்டனர் என்று கூறப்படுகிறது.

கடற்படையினரின் கட்டுக்காவலையும் தாண்டி இவர்கள் தமிழகம் நோக்கித் தங்கள் படகைச் செலுத்திச் சென்றுவிட்டனர்.

இரண்டு ஆண்களும் ஆறு பெண்களுமாக எட்டுப்பேர் அந்தப் படகில் இருந்தனர். இவர்கள் நெடுந்தீவில் இருந்து நேற்று முன்தினம் கச்சதீவுக்கு வந்திருந்தனர். உற்சவம் முடிவடைந்ததும் படகுகளைச் சோதனை

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து தமிழக மீனவர்கள் நேற்று வடமராட்சியில் கரை ஒதுங்கினர்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

பருத்தித்துறை, கற்கோவளம் கடற்பரப்புக் குள் 'குல்லா'ப் படகில் நேற்று முற்பகல் 11 மணியளவில் நுழைந்து விட்ட ஐந்து தமிழக மீனவர்களைப் பிடித்த வடமராட்சி மீனவர்கள் அவர்களைப் பத்திரமாக வடமராட்சியில் கரைசேர்த்ததைக் கண்ணுற்ற கடற்படையினர், அத்துமீறி நுழைந்த அந்தத் தமிழக மீனவர்களைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டனர். ஆயினும், வடமராட்சி மீனவர்கள் அதற்கு இணங்கவில்லை. இதனால், இரு சாராருக்குமிடையே கொஞ்ச நேரம் பெரும் பதற்றம் உருவானது.

மீன்பிடி வலைகளுடன் சிக்கி[illegible] மீனவர்களை எச்சரித்து விட்டு தென்[illegible]

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கச்சதீவு உற்சவம் சிறப்புற நிறைவு
# ஆயிரம் பக்தர்கள் பூசையில் பங்கேற்பு

## தடையை மீறி தமிழ்நாட்டிலிருந்தும் 128 பேர் வருகை

**கச்சதீவிலிருந்து 'உதயன்' செய்தியாளர் லக்ஸ்மன்**

கச்சதீவு,மார்ச்13

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று மிகவும் பக்திபூர்வமாக நடந்தேறியது.

குடாநாட்டின் பல இடங்களில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் வருகைதந்த சுமார் ஆயிரம் பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொண்டனர் என்று அங்குள்ள 'உதயன்' செய்தியாளர் அறிவிக்கிறார்.

சனிக்கிழமை ஆரம்பமான திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுபெற்றது.

குடாநாட்டின் தீவுப் பகுதிகளில் இருந்தும் இதர இடங்களில் இருந்தும் 826 பேர் திருவிழாவில் கலந்துகொண்டனர் என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் இருந்து பக்தர்கள் கச்சதீவுக்கு வருகை தருவதற்கு பொலீஸார் அனுமதிக்காதபோதிலும் அங்கிருந்து சுமார் 128 பேர் தடையை மீறி களவாகப் படகுகளில் ஏறிவந்து உற்சவத்தில் கலந்துகொண்டனர்.

மூன்று குருமார்களும் மூன்று கன்னியாஸ்திரிகள் மற்றும் நான்கு பெண்களும் இரு சிறுவர்களுமாக 128 பேர் மட்டும் தமிழகத்தில் இருந்து வந்து உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

நெடுந்தீவில் இருந்து 45 படகுகளில் 826 பக்தர்கள் கச்சதீவுக்கு வந்திருந்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் தமிழக குருமார்கள் இணைந்து நேற்றுக்காலை திருப்பலிகளை நிறைவு செய்தனர். அதன்பின் சுற்றுப் பிரகார பவனியும் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 2 மணியுடன் அங்கிருந்து சகல பக்தர்களும் வெளியேறிவிட்டனர்.

மிகவும் பக்திபூர்வமாக உற்சவம் நடந்தேறியது என்றும் -

பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் யாவும் செய்யப்பட்டிருந்தன என்றும் -

அங்குள்ள எமது செய்தியாளர் தெரிவித்தார். (ஐ-3-111)

*(கச்சதீவு உற்சவத்தில் கலந்துகொள்ள விடாமல் தமிழக பக்தர்கள் தடுக்கப்பட்டமை பற்றிய செய்தி 5ஆம் பக்கத்தில்)*

## இந்து சமயப் பேரவை ஏற்பாட்டில் ஆய்வுரை

யாழ்ப்பாணம்,மார்ச் 13

இந்து சமயப் பேரவையினர் நடத்தி வரும் பௌர்ணமி காலச் சிந்தனையில் நாளை முற்பகல் 10 மணிக்கு கந்தர்மடம் இந்து சமயப் பேரவைத் தலைமைச் செயலகத்தில் 'சைவ வாழ்வியலில் பூர்வக் கிரியைகள்' என்ற தலைப்பில் ஆய்வுரை நடைபெறவுள்ளது.

இந்து சமயப் பேரவைத் தலைவர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இந்து சமயப் பேரவையின் உப தலைவர் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார். (3-203)

# தீவுப் பகுதிக்கு 24 மணிநேர மின்சாரம்
# நேற்று வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பு

ஊர்காவற்றுறை,மார்ச்13

தீவுப் பகுதிக்கான 24 மணிநேர மின்சார விநியோகம் நேற்று நண்பகல் 12 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இது தொடர்பான சம்பிரதாய நிகழ்வு ஊர்காவற்றுறை நகரில் நடைபெற்றது. இலங்கை மின்சாரசபையின் அதிகாரிகளும் பொதுமக்களும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

முதற்கட்டமாக ஏற்கனவே மின்சார விநியோகம் வழங்கப்பட்ட ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளுக்கு நேற்று நண்பகல் முதல் மின்சாரம் வழங்கப்பட்டது.

இதற்கிடையில் - நேற்றுக்காலை கடமை நிமித்தம் ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் 24 மணிநேர மின்சாரம் வழங்குவதற்கென நிறுவப்பட்ட மின்கோபுரத்தைப் பார்வையிட்டதுடன், 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட பலாபலன்கள் குறித்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் அரச அதிபர் பார்வையிட்டார். தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், 'நிகொட்' திட்டத்தின் யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.நவரட்ணராஜா, உதவி அரச அதிபர் பணிமனையின் அலுவலர்கள் ஆகியோரும் அரச அதிபருடன் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்தனர்.

இறுதியில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்கு விஜயம் செய்த யாழ். அரச அதிபர், உதவி அரச அதிபர் பணிமனையின் செயற்பாடுகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டதுடன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (எ-16)



கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் அமைந்துள்ள மஹாகாளி அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. பக்தர்கள் புடைசூழ்ந்து நிற்க சுவாமி தேரில் வீதியுலா வருவதையும் பக்தர்கள் தேங்காய் அடித்து நேர்த்திகளை பூர்த்திசெய்வதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : பிரதீ)*

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் லீக் முறையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 3.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தின் கூடைப் பந்தாட்ட ஆடுகளத்தில் ஆரம்பமாகின்றது.

இச்சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 12 கழகங்களும், பெண்கள் பிரிவில் 6 கழகங்களும் பங்குபற்றுகின்றன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப. 3.30 மணி - பெண்கள் பிரிவு - பமிலியன்ஸ் (சிவப்பு) வி.க. எதிர் பட்டபிளை வி.க.

மாலை 4.30 மணி - ஆண்கள் பிரிவு - பற்றீஸியன்ஸ் வி.க. எதிர் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) வி.க. (3-190)

## மாசி மக உற்சவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

கோண்டாவில் கிழக்கு சோலையம்பதி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று காலை 8.30 மணிமுதல் மாசிமக விசேட அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெறவிருக்கின்றது. மதியம் 12 மணியளவில் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (3)

## சாரணிய வழிகாட்டுநர் கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 13

பெண் சாரணியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவில் நடைபெறவுள்ள தென மாவட்ட ஆணையாளர் திருமதி ஜெ.மித்திரரஞ்சன் தெரிவித்தார். (3-203)

# கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலம் 5 வருடத்திலிருந்து 10 வருடமாக உயர்வு

## இன்று முதல் புதிய நடைமுறை அமுலுக்கு

கொழும்பு,மார்ச்13

கடவுச்சீட்டு(பாஸ்போட்) செல்லுபடியாகும் காலம் 5 வருடங்களிலிருந்து 10 வருடங்களாக நீடிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை முதல் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வருகின்றது.

இது தொடர்பாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.பி. அபேகோன் பொது அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

தற்போதைய நடைமுறையில் உள்ள கடவுச்சீட்டை புதுப்பிப்பதற்கென தினமும் பல நூற்றுக்கணக்கானோர் திணைக்களத்துக்கு வருகின்றனர். இவ்வாறு வரும் பொது மக்கள் பல சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர். இவ்வாறு வருகை தரும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு 10 வருடங்களுக்குச் செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

10 வருடங்களுக்குச் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு வழங்குவது தொடர்பாக மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எனினும் கடவுச்சீட்டு செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு அறவிடப்படும் ரூ. 500 (வருடமொன்றுக்கு ரூ.100 வீதம்) கடவுச்சீட்டு வழங்கப்படும் கட்டணத்துடன் இணைத்து அறவிடப்படும்.

இதன் பிரகாரம், ஒரே நாளில் கடவுச்சீட்டுப் பெற 5 ஆயிரத்து 500 ரூபாவும் வழமையான சேவையில் கடவுச்சீட்டுப் பெற 3 ஆயிரம் ரூபாவும் செலுத்தப்பட வேண்டும். - என்று அந்த பொது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கிரிக்கெட் பயிற்சி முகாம் இன்று சென்.பற்றிக்ஸில்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

வேகப்பந்து மற்றும் சுழல்பந்து வீச்சு தொடர்பான பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி முகாம் இன்று காலை 9 மணி முதல் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கான பயிற்றுநர் குமார் இராமநாதன் இந்தப் பயிற்சி முகாமை நடத்தவுள்ளார்.

சகல பாடசாலைகளில் இருந்தும் பந்து வீச்சாளர்கள் இந்த முகாமில் பங்குபற்றவிருக்கின்றனர். (3)




## மொகாலி டெஸ்ட்:

# இந்தியச் சுழலில் சிக்கி திணறுகிறது இங்கிலாந்து

மொகாலி,மார்ச் 13

இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள முடியாமல் இங்கிலாந்து அணியின் துடுப்பாளர்கள் மொகாலி டெஸ்ட்டில் திணறி வருகின்றனர். ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்று 112 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்தது. இப்போது இந்திய அணியைவிட 74 ஓட்டங்களை அதிகமாகப் பெற்றுள்ளது இங்கிலாந்து.

தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் இங்கிலாந்து அணி இறுதி நாளான இன்று மிகப் பொறுப்புடன் ஆடவேண்டிய இக்கட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் துடுப்பாளர் இயன் பெல் மட்டுமே இந்தியச் சுழற்பந்து வீச்சாளர்களை ஓரளவு சமாளித்தார். அவர் 57 ஓட்டங்களைப் பெற்றார். சகல துறை ஆட்டக்காரர் பிளின்டொப் ஆட்டமிழக்காமல் 16 ஓட்டங்களுடன் களத்தில் இருக்கிறார். இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் 338 ஓட்டங்களைப் பெற்றது. இங்கிலாந்து அதன் முதல் இன்னிங்ஸில் 300 ஓட்டங்களைப் பெற்றது. (க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

## அரசின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தும் அமெ. அறிக்கை

இலங்கை இனப்பிரச்சினையை மேலும் சிக்கல் படுத்தும் விதத்தில் தென்னிலங்கை அரசு ஒளிவு மறைவாக மேற்கொண்டு வந்த கபட நாடகம் - சதித் திட்டம் - இப்போது சர்வதேச ரீதியில் அம்பலமாகி விட்டது. தென்னிலங்கையின் முகத்திரையைக் கிழித்து, உண்மையை அம்பலப்படுத்தியிருக்கின்றது அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மனித உரிமைகள் பற்றிய அறிக்கை.

ஒரு புறம் சமாதானப் பிரியர்கள் போல - அமைதி வழித் தீர்வில் ஆர்வம் உள்ளவர்கள் போல - தம்மைக் காட்டிக் கொண்டு, மறுபுறம் போர் வெறித்தனத்துடன் செயற்பட்ட தென்னிலங்கை அரசுத் தலைமையின் இரட்டை வேடம் அமெரிக்காவின் இந்த அறிக்கையின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2005 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற பல வன்முறைகள் குறித்து விவரமான தகவல்களை வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை, வழமைபோல இம்முறையும் வன்முறைகளுக்காக விடுதலைப் புலிகள் இயக்கம் மீதும் குற்றம் சுமத்தத் தவறவில்லை.

அதேசமயம், தென்னிலங்கை அரசின் கபடத் திட்டத்தை அந்த அறிக்கை தோலுரித்துக் காட்டியிருப்பது முக்கிய - புதிய - அம்சமாகின்றது.

அண்மையில் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது சர்ச்சையைக் கிளப்பிய முக்கிய விடயம் 'துணைப் படைகள்' பற்றியதாகும்.

தமது அரசுப் படைகளின் அனுசரணையுடன் அத்தகைய 'துணைப்படைகள்' இயங்குகின்றன என்ற விடுதலைப் புலிகளின் குற்றச்சாட்டை ஜெனிவாப் பேச்சுகளின்போது அடியோடு - ஒரேயடியாக மறுத்துரைத்தது இலங்கை அரசுத் தரப்பு.

'துணைப்படைகள்' என்று எவையும் இயங்கவேயில்லை என்று சாதித்த அரசுப் பிரதிநிதிகள், 'துணைப் படைகள்' என்ற சொல்லைப் பிரயோகிப்பதையும் கூட ஆட்சேபித்தனர்.

ஆனால் -

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் இணைத் தலைமை அமைப்புகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன தாம் கடைசியாக வெளியிட்ட இரண்டு கூட்டறிக்கைகளிலும் 'துணைப்படை' குறித்துக் குறிப்பிட்டதோடு அவற்றின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை அப்புறப்படுத்துவது பற்றியும் வலியுறுத்தியிருந்தன. அதனை ஜெனிவாப் பேச்சுகளின் போது புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நேரடியாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்படியிருந்தும், அரசின் படைகளின் கீழ் 'துணைப் படைகள்' என்ற கோதாவில் எந்த அமைப்பும் இயங்கவேயில்லை என முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல ஜெனிவாப் பேச்சில் ஒரேயடியாகப் பொய்வேடம் போட்டது அரசுத் தரப்பு.

அது பொய்வேடமே என்பதை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மனித உரிகைமள் பற்றிய தற்போதைய அறிக்கை துலாம்பரப்படுத்தியிருக்கின்றது.

*"இலங்கை அரசுடன் - அதன் இராணுவத்துடன் - சேர்ந்து பல துணைப்படைகள் இயங்குகின்றன. கருணா குழு, ஈ.பி.டி.பி., புளொட் ஆகியனவும் அவற்றில் அடங்கும்.*

*"2005 ஆம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற பல ஆயுதத் தாக்குதல்களில் இக்குழுக்கள் நேரடியாக ஈடுபட்டன.*

*"இந்தத் துணைப்படைகள் பல சந்தர்ப்பங்களில் இலங்கை இராணுவத்துடன் நேரடியாகச் சேர்ந்தும், அரசின் உளவு முகவர்களுடன் இணைந்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை ஒடுக்கும் நோக்குடன் ஆயுதத் தாக்குதல்களில் ஈடுபட்டன"* - இப்படி அந்த அறிக்கை விவரிக்கின்றது.

புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 27 பேரை இத்துணைப் படைகள் கடந்த வருடத்தில் கொன்றொழித்திருக்கின்றன என்ற விவரத்தை வெளியிடும் அந்த அறிக்கை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, பத்திரிகையாளர் தர்மலிங்கம் சிவராம், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் பரராஜசிங்கம் ஆகியோரின் கொலைகள் பற்றிய விவரங்களையும் தொட்டுக் காட்டியுள்ளது.

துணைப்படை என்று எதுவுமே இல்லை என்று பொய்யை மூடி மறைத்து, கதைவிட்ட தென்னிலங்கை இப்போது சர்வதேசத்தின் முன் உண்மை அம்பலமானதால் தலைகுனிந்து நிற்கின்றது.

இதற்குப் பின்னரும் துணைப்படைகள் ஏதும் தன்னிடம் இல்லவே இல்லை எனக் கூறி அழிச்சாட்டியம் பண்ணுவதைவிடுத்து, உண்மையை ஒப்புக் கொண்டு, துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து, அவற்றை அப்புறப்படுத்தும் நடவடிக்கையை இதய சுத்தியுடனும், முழுப் பங்களிப்புடனும் முன்னெடுக்க தென்னிலங்கை அரசுத் தலைமை முன்வரவேண்டும்.

அதுவே, இன்றைய நிலையில் அமைதித் தீர்வை நோக்கிய வழியில் அரசுத் தரப்பு எடுக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கையாக இருக்கமுடியும்.

செய்யுமா தென்னிலங்கை?

# நீதிமன்றங்களில் தமிழ்மொழிப் பயன்பாடு: சட்டம் வலியுறுத்தினாலும் அரசு பாராமுகம்

## அமெரிக்க அறிக்கை சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு,மார்ச்13

இலங்கையில் நீதிமன்ற நடைமுறைகளில் மூன்று மொழிகளும் பயன்படுத்தப்படுவதை இலங்கை அரசு உறுதி செய்யவில்லையென்று அமெரிக்க ராஜாங்க அமைச்சின் மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையில் கண்டிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் 'இலங்கையில் மனித உரிமைகள்' தொடர்பான அறிக்கையின் சில முக்கிய பகுதிகள் ஏற்கனவே உதயனில் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இலங்கை நீதிமன்றங்களில் மும்மொழிகளும் பயன்படுத்தப்படாமை குறித்து அவ்வறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற செயற்பாடுகளிலும் ஏனைய சட்ட நடவடிக்கைகளிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் பயன்படுத்தப்படவேண்டும் என சட்டம் வலியுறுத்தியபோதிலும் பெரும்பாலான நீதிமன்ற நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் (பெரும்பான்மையாகத் தமிழர்களைக் கொண்ட வடபகுதியிலும்) ஆங்கிலம் அல்லது சிங்கள மொழிகளிலேயே இடம்பெறுகின்றன. நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளர்கள் நியமனம் குறைவாக இருத்தல் இதற்குக் காரணமாகின்றது. இதனால், தமிழ்பேசும் பிரதிவாதிகளுக்கு நியாயமான செவிசாய்ப்பு கிடைப்பதில் தடங்கல் ஏற்படுகின்றது. தமிழில் ஒருசில சட்ட நூல்களே உள்ளன. சகல சட்டங்களும் வர்த்தமானியில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் [illegible]ரசுரிக்கப்படவும் பரப்புரை செய்யப்[illegible]வும் வேண்டும் என்ற சட்டத்தின் தேவையை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

**தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகள்**

பொலீஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லாமை குறித்து அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'தமிழர்கள் பெரும்பான்மை[illegible]யாக உள்ள பகுதிகளில் தமிழ்ப் பொலீஸார் ஒருசிலரே உள்ளனர். இந்த அதிகாரிகள் பொதுவாக தமிழ் மற்றும் ஆங்கிலம் பேசுவதில்லை. இது நம்பிக்கையீனத்திற்கும் தப்பபிப்பிராயங்களுக்குமே வழிவகுக்கின்றது'

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்குவதாக உறுதி

யாழ்ப்பாணம்,மார்ச்13

மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகளுக்கு எதிர்காலத்தில் நியமனம் வழங்கும் சந்தர்ப்பங்களின்போது ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் நியமனம் தொடர்பாக மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் இடையேயான சந்திப்பு அண்மையில் மாகாணக் கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பட்டதாரிகளை நேரடியாகத் தெரிவுசெய்ததுபோல் மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகளையும் நேரடியாக மாகாண சபைக்குட்பட்ட இடங்களில் உள்ள வெற்றிடங்களுக்குத் தெரிவுசெய்யவேண்டும் என்றும் - 2006ஆம் ஆண்டு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டபோது நியமனம் கிடைக்காத 76 பேருக்கும் ஆசிரியர் நியமனம் வழங்குவதன் மூலம் வடக்கு - கிழக்கின் அரச பாடசாலைகளில் கடல்வளப் பாடத்துறையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம் எனவும் - கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கோரிக்கைகள் பற்றி கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலர் இவை தொடர்பாக சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

இந்தக் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ரங்கராஜாவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவமும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.(ஐ-203)

### உதயவாக்கு

வாழ்வில் நமக்குச் சொந்தம் என்று சொல்லக்கூடிய சொத்து நம் செயல்களே.

- ஓர் அறிஞர்.

### நாளை

மாசி 30
செவ்வாய்க்கிழமை
14.03.2006
திதி : பூரணை
பின்னிரவு : 05.40 வரை
நட்சத்திரம் : பூரம்
முன்னிரவு : 10.18
பூரண விதரம்
சுபநேரம் : 10.51 - 12.21
ராகுகாலம் : 03.21 - 04.51
(யாவும் பழைய நேரப்படி)

# பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்த கல்வி வலயந்தோறும் நடமாடும் சேவை

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடு

அச்சுவேலி,மார்ச்13

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நாடுதழுவிய ரீதியில் வலயக்கல்வி அலுவலகங்கள் தோறும் நடமாடும் சேவைத் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தி வருகின்றது.

'மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்கீழ் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்தல் பணியை இந்த நடமாடும் சேவையின்போது மேற்கொள்ளும்.

இந்த வகையில், எதிர்வரும் 16ஆம் திகதி வவுனியாவிலும், 17ஆம்திகதி மன்னாரிலும் ,அடுத்த மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் இந்த நடமாடும் சேவைத்திட்டம் இடம்பெறும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க வெளியிட்டுள்ள செயற்திட்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அட்டவணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உரிய மாகாணங்களிலுள்ள அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களால் இதுவரை கோரப்படாத ஊழியர்களின் பெறுபேறு உறுதிப்படுத்தும் விண்ணப்பங்களை அன்றைய தினம் ஒப்படைக்கமுடியும்.

2005.08.31ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை பெறுபேறு உறுதிப்படுத்தப்படாமல் இருப்பின் அவை தொடர்பான தகவல்களை இந்த நடமாடும் சேவையில் ஒப்படைக்கமுடியும். அல்லது உரிய விண்ணப்பப்படிவங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2005.08.31ஆம் திகதிக்குப் பின்னர் அனுப்பப்பட்டுள்ள பெறுபேறு உறுதிப்படுத்தல் விண்ணப்பங்கள் தொடர்பான உரிய பதில்கள் நடமாடும் சேவையின்போது ஒப்படைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், அழிவுற்ற பாடசாலையின் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பின் அது தொடர்பான விவரங்களை வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும் - என்று அதில் உள்ளது. (எ-11-202)



# கதிர்காமர் படுகொலை வழக்கு: சந்தேக நபர்களில் ஒருவர் விடுதலை

கொழும்பு,மார்ச்13

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை வழக்கிலிருந்து சந்தேக நபரான சிவராமன் சிவ ரஞ்சன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவரை 5 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதி மன்ற நீதி பதி சரோ ஜினி குசலா வீர வர்த் தன உத்தர விட் டுள் ளார்

சந்தேக நபருடன் கைதுசெய் யப்பட்ட காளிமுத்து திருக் குமார் என்பவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அவ ரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரினார்.

இதனையடுத்து, இந்த வழக்கில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் நீதிபதி கேள்வி எழுப்பினார்.

கொலை தொடர்பான விசாரணைகள் நிறைவடைய வில்லை என்று தெரிவித்த கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர், சந்தேக நபர்கள் மீதான நடவடிக்கைகள் தொடர் பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறவுள்ள தாகவும் தெரிவித்தனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய வழக்குத் தொடர்வதற்குப் போதிய சாட்சியங்கள் இருப்பதாகவும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள ஐவரும் பாதுகாப்புக் காரணங்களுக்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படவில்லை. சிவராமன் சிவரஞ்சன் மற் றும் காளிமுத்து திருக்குமார் ஆகிய இருவர் மட் டுமே நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள தமிழினியன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய் யப்பட்டுள்ளதாகவும் -

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணை களில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர் வதற்குப் போதுமான சாட்சியங்கள் உள்ள தாகத் தெரியவந்துள்ளது என்றும் - பொலீ ஸார் தெரிவித்தனர்.

பிணையில் விடுதலையாகும் சிவராமன் சிவரஞ்சன் மே மாதம் 19ஆம் திகதி நீதிமன் றத்தில் ஆஜராக வேண் டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

ஏனைய சந்தேக நபர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் நீதிபதி உத்தரவிட்டார். (எ)


UNIT
Imported Monitors & Tv's @ Low Priced
347, K.K.S. Road, Manohara Junction, Jaffna.



## தேர்முட்டி அடிக்கல் நாட்டுதலும் புதிய தேர் அச்சு வைத்தலும்

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலயத்தில் தேர்முட்டி மண்டப அடிக்கல் நாட்டு நிகழ்வு 15.03.2006 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கும் சித்திரத்தேர் அச்சு வைத்தல் நிகழ்வு 16.03.2006 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கும் இடம்பெறும் என்ற செய்தியை ஆலயத்திருப்பணி, பரி பாலன சபையினர் அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றனர்.

- ஆலய திருப்பணி பரிபாலன சபை.

(48017)(42-11-45)



ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ



யாழ்.வண்ணை - கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2006

★ தேர்த்திருவிழா

இன்று 13.03.2006 திங்கட்கிழமை
காலை 5.30 மணி ஸ்நானபிஷேகம்
காலை 7 மணி கொடிஸ்தம்பபூசை
காலை 8 மணி வசந்தமண்டபபூசை
காலை 9 மணி அம்பாள் தேரில் எழுந்தருளல்
நண்பகல் 12 மணி அம்பாள் பச்சைசாத்தி தேரினின்றும் இறங்குதல்

தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை, பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று

பூங்காவன உபயகாரர் குழுவால் தற்காலிக அன்னதான மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்

அம்பிகை அடியார்கள் அனைவரையும் அன்னதானத்தில் கலந்து அம்பிகையின் அருள்கடாட்சத்தினை பெறுமாறு அழைக்கின்றோம்.

- பூங்காவன உபயகாரர் குழு.

விளம்பர அனுசரணை:-

ஸ்ரீநாகா பொம்பே டிசைன் அன் கட்டிங் சென்ரர்
(உரிமையாளர்: ஐயம் பெருமாள் சுரேஸ்)

(48016) (42-11-45)


## தபால் பிரிக்கும் பகுதியில் வெள்ளம் தேக்கம்

தென்மராட்சி,மார்ச் 13

சாவகச்சேரி அஞ்சல் அலுவலக தபால் கள் தரம் பிரிக்கும் பகுதியில் மழை வெள் ளம் காணப்படுகின்றது.

கூரையூடாக மழை நீர் இப்பிரிவுக்குள் வீழ்ந்து வெள்ளமாகத் தேங்கி நிற்கின்றது.

இதனால், மழை பெய்யும் வேளைகளில் அலுவலகத்தில் உள்ள வேறு இடத்தில் தபால்களைத் தரம் பிரிக்கும் பணி இடம் பெறுகிறது.

இந்த அஞ்சல் அலுவலகம் கடந்த யுத்த வேளையில் சேதமடைந்ததையடுத்து 2003 ஆம் ஆண்டு 40 லட்சம் ரூபா செலவில் புன ரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)

## சமுர்த்தி முத்திரைகள் வந்து சேர்ந்தன

கொழும்புத்துறை,மார்ச் 13

சமுர்த்தி நிவாரணம் பெறுவோருக்கான இந்த வருடத்துக்குரிய புதிய முத்திரைகளை சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வறுமை நிவாரண ஆணையாளர் திணைக்களத்தில் இருந்து சமுர்த்தி முத் திரைகள் எடுத்து வரப்பட்டு அந்தந் தப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத் தில் இந்த வருடம் எழுபதாயிரம் குடும் பங்கள் சமுர்த்தி நிவா ரணம் பெறத் தகுதி பெற்றுள்ளன என் றும் - தெரிவிக்கப் பட்டது. (எ-30)

## மாசிமக ஆராதனை

சாவகச்சேரி சந் திரசேகர வாரிவண நாத சிவன் தேவஸ் தானத்தில் பெரிய மாவடி வித்தகம் ஆதீ னத்தின் ஏற்பாட்டில் மாசிமக விசேட அபி ஷேக ஆராதனை கள் இன்று திங்கள் காலை 8 மணி தொடக் கம் நடைபெறவுள் ளது. (ஐ-31)

## 60 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



சண்முகா போஜன்
மண்ணில் 26.03.1982



போஜன் அர்த்தநாரீஸ்வரி
27.10.1954



தியாகேஸ்வரன் ரேணுகா
23.05.1975

விண்ணில் 16.01.2006

16.01.2006 இல் அதிகாலை எமது குடும்பத்திற்கு ஏற்பட்ட துர்ப்பாக்கிய இழப்பினால் அமரத் துவம் அடைந்தோர் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 14.03.2006 செவ்வாய்க்கிழமை இல.17, முதலி யார் கனகசபை வீதி, மானிப்பாயில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும். மதியம் 12 மணி முதல் 3 மணிவரை மதியபோசன விருந்து இடம்பெறும்.

இந்நிகழ்வில் எமது சேவை, அன்பு நிஜித்தம் நன்றிமறவாது பல்திசையினின்றும் எமது துயர் பகிர்ந்த, ஆறுதல் அளித்த அனைத்து அன்புள்ளங்களையும் கலந்து தங்கள் அன்பினைப் பகிர்ந்து கொள்ளுமாறு உள அன்புடன் அழைக்கின்றோம். வைத்தியசாலையில் இருந்தமை, குறிப்பிட்ட நேரம் மட்டும் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டமை ஆகிய காரணங்களால் துயர்பகிர்ந்த அனை வரையும் அறியக்கிடைக்கவில்லை. மேலும் உடற்பாதிப்பால் அனைவரையும் நேரில் அழைக்க முடியவில்லை. இதனை மன்னித்து இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உள அன்புடன் அழைக்கின்றோம்.

தொ.இல. 0779 671356
0776 065127.

த.நா.போஜன் , மகன் உல்லாசனன்
குடும்பத்தினர்.

(48019)(42-11-45)

## 5ஆம் ஆண்டு நினைவுகளில்...

மலர்வு 08 - 05 - 1984



உதிர்வு 08 - 03 - 2001

அமரர் கோபாலபிள்ளை தினகரதாஸ்

பாசத்தின் பிடியில் எம்மை
அரவணைத்த சோதரனே
நேசத்தை நிலைநாட்டி எம்மை
விட்டுச் சென்ற தூரமெங்கே?
எம்மை விட்டு நீ சென்று
ஐந்தாண்டுகள் கடந்தாலும்
எம் கண்ணீரண்டில் ஊற்றெடுக்கும்
உன் ஞாபக நினைவலைகளை
கண்ணீர்ப் பூக்களாக்கி ஆன்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


"கிளான்",
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(48021)(42-11-45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 - 11 - 1977



மறைவு. 22 - 02 - 2005

அமரர் வர்ணகுலசிங்கம் சிவரூபன்

திதி: 13.03.2006

ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
உன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

சங்கானை நண்பர்கள்.

(48020)(42-11-45)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 05 - 1927



மறைவு 22 - 02 - 2005

அமரர் முத்தையா சுப்பிரமணியம்

திதி: 13.03.2006

உமது நினைவுகள்
எம்மை விட்டு நீங்குவதில்லை.

'கைலை',
ஆனைக்கோட்டை. (48014)(42-11-45)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு திரேசம்மா



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப் பிடமாகவும் உரும்பிராய் மேற்கு கோகுல வீதி யை (C.T.B. டிப்போவுக்கு முன்பாக) வசிப்பி டமாகவும் கொண்ட மார்க்கண்டு திரேசம்மா அவர்கள் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலன் - முத்தி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வையிரவன் - வள்ளி தம்பதியரின் மருமக ளும் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற அசுவத்தம்மா மற்றும் சிவலிங்கம், குமாரசிங்கம் (யாழ். மருத்துவ பீட ஊழியர்), செல்வராணி, புவனேஸ்வரி ஆகியோ ரின் அன்புத் தாயும் செல்லத்துரை, இரத்தினேஸ்வரி, இராச சுலோசனா, முத்துலிங்கம் (முத்தொளி VDO), யோகராசா ஆகி யோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, அரு ணகிரிநாதன் மற்றும் அரசம்மா, சிவபாதம் ஆகியோரின் அன் புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2006) திங்கட் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணி யளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக் கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
கோகுல வீதி,
(C.T.B. டிப்போ முன்பாக)
கோண்டாவில்.

(48018)
(42-11-45)

தகவல்:
குமாரசிங்கம் (மகன்)
(யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட ஊழியர்)

# கச்சதீவு உற்சவத்துக்கு தமிழக பக்தர்கள் செல்லத் தடை விதிப்பு! அங்கு ஆர்ப்பாட்டம்!!

இராமேஸ்வரம்,மார்ச் 13

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்துக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து இராமேஸ்வரத்தில் கத்தோலிக்கர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய விழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. விழாவிற்குச் செல்ல பொலீஸார் தடை விதித்ததால் இராமேஸ்வரம் அந்தோனியார் ஆலயத்தில் அதே நேரத்தில் சிறப்புத் திருப்பலி நடத்தப்பட்டது. முதன்மை குரு தலைமையில் அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டமும் நடந்தது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய விழா சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. நெடுந்தீவு பங்குத் தந்தை கொடியேற்றி விழாவைத் தொடக்கி வைத்தார். தொடர்ந்து திருப்பலி நடந்தது. இதில் கலந்துகொள்ள இராமேஸ்வரம், பாம்பன் பகுதியிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்த ஏராளமான கிறிஸ்தவர்கள், மீனவர்கள் படகுகளில் செல்ல முயன்றனர். ஆனால் பொலீஸார் கச்சத்தீவு செல்லத் தடை விதித்ததால் கிறிஸ்தவர்களிடையே குழப்பம் நிலவியது. படகு உரிமையாளர்களிடம் படகு பறிமுதல் செய்யப்படும் என பொலீஸார் எச்சரித்தனர். கூடுதல் பொலீஸார் குவிக்கப்பட்டனர். கச்சதீவு செல்ல முயன்ற பத்திரிகையாளர்கள் கைதுசெய்யப்பட்டதாகப் புரளி கிளம்பியது. இதனால் மீனவர்கள் மற்றும் மக்கள் மத்தியில் ஒருவித அச்சம் ஏற்பட்டது. இதனிடையே கச்சதீவு விழா தொடங்கிய அதே நேரத்தில் ராமேஸ்வரத்திலுள்ள கடற்கரை அந்தோனியார் ஆலயத்தில் சிவகங்கை மறை மாவட்ட முதன்மை குரு அமல்ராஜ் தலைமையில் சிறப்புத் திருப்பலி நடத்தப்பட்டது.

### முதன்மைக் குரு கண்டனம்

தடை விதிக்கப்பட்டது தொடர்பாக முதன்மை குரு அமல்ராஜ் கூறியதாவது:

இருநாட்டு மக்களும் ஒற்றுமையுடன் கொண்டாடி வந்த கச்சதீவு விழாவில் கலந்துகொள்ள பொலீஸார் தடை விதித்து எங்களது ஆன்மீக உணர்வை சிதைத்து விட்டனர். இலங்கை கடற்படையினரும் யாழ்ப்பாண பங்கு மக்களும் இங்குள்ளவர்களின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஆனால், தமிழக அரசும், அதிகாரிகளும் கடைசி நேரத்தில் கச்சதீவு விழாவிற்கு செல்லத் தடை விதித்தது எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமலும், தமிழக மக்கள் கச்சதீவு சென்று பிரார்த்தனை செய்யவும் வரும் காலங்களில் தேவையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வரவேண்டும் என்றும் கூறினார்.

(ஐ)



இராமேஸ்வரத்தில் பக்தர்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்யும் காட்சி...

# சேர்பிய மருத்துவர் முன்னிலையில் மிலோசெவிக்கின் பிரேத சோதனை

லண்டன்,மார்ச் 13

முன்னாள் யூகோஸ்லாவிய சர்வாதிகாரி செலோபோடான் மிலோசெவிக்கின் மரணம் தொடர்பாக நடைபெறும் பிரேத பரிசோதனையின் போது சேர்பிய டாக்டர் ஒருவரும் பிரசன்னமாய் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மரணத்துக்கான காரணம் மற்றும் நேரம் பற்றிய விவரங்கள் பிரேத பரிசோதனையின் போது வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

64 வயதான மிலோசெவிக் காவலில் வைக்கப்பட்டிருந்த அறையில் கடந்த சனிக்கிழமை இறந்துகிடக்கக் காணப்பட்டார். கடுமையான உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதயக் கோளாறுகளால் அவர் பாதிக்கப்பட்டிருந்தார்.

1990 ஆம் ஆண்டு பாவ்கன்ஸில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாக ஹேக் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த விசாரணைகள் முடிவடைய இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில் அவர் மரணமாகியுள்ளார். அவர் மரணம் தொடர்பாக முழு அளவில் பிரேத பரிசோதனையும் நஞ்சூட்டப்பட்டிருக்கக் கூடிய தன்மை குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

சிரெபெனிக்கா, பொஸ்னியா பகுதிகளில் இடம்பெற்ற இனச் சுத்திகரிப்பு குற்றங்கள், பொஸ்னியா, குரோஷியா, கொசோவோ பகுதிகளில் இடம்பெற்ற மனித வர்க்கத்துக்கெதிரான பாரிய குற்றச்செயல்கள், பொஸ்னியா, குரோஷியா தொடர்பான ஜெனீவா ஒப்பந்த மீறல்கள் போன்ற குற்றங்களுக்காக மிலோசெவிக் விசாரிக்கப்பட்டு வந்தார்.

மிலோசெவிக்கின் சடலம் சிறைச்சாலையிலிருந்து நெதர்லாந்தின் சட்ட வைத்திய நிறுவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.



அங்கு நடைபெறும் பிரேத பரிசோதனைகளின் போது சேர்பிய கோரிக்கையின்பேரில் பொல்கிரேட் வைத்திய நிபுணர் ஒருவரும் பிரசன்னமாய் இருப்பார்.

காலமான முன்னாள் தலைவரின் மூத்த சகோதரர் மோரிஸ் லாவ் மிலோசெவிக் கருத்துத் தெரிவிக்கையில் ஹேக் நீதிமன்றத்தைக் குறை கூறினார். தமது சகோதரருக்குத் தகுந்த வைத்திய பராமரிப்புக்கு இடந்தராததாலேயே அவர் மரணமாகினார் என்று அவர் கூறினார்.

ஆனால், ஹேக்' நீதிமன்றம் இந்தக் குற்றச் சாட்டை மறுத்துள்ளது. அவரது உடல் நிலைக்கேற்றாற்போல் தகுந்த கவனம் செலுத்தப்பட்டு வந்தது என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ப)

## ஈராக்கில் கடத்தப்பட்ட அமெரிக்கர் சடலமாக மீட்பு!

பக்தாத்,மார்ச் 13

ஈராக் தீவிரவாதிகளிடம் சிக்கிய அமெரிக்க பிணைக் கைதி, பரிதாபமாக சுட்டுக் கொல்லப்பட்டார். கொல்லப்படும் முன்னர் தீவிரவாதிகளால் சித்திரவதை செய்யப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

ஈராக்கில் சதாம் ஹுசேனின் வீழ்ச்சிக்குப் பின்னர், ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறுவது தினசரி செய்தியாகிவிட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த டாம் பொக்ஸ் என்பவர் உட்பட பிரிட்டன், கனடா நாடுகளைச் சேர்ந்த நான்கு பேரை 'ஸ்வாட்ஸ் ஒப் ட்ரூத்' என்ற தீவிரவாதக் கும்பல் கடந்த நவம்பர் மாதம் கடத்திச் சென்றது. 'சிறையில் உள்ள ஈராக் கைதிகளை விடுவிக்க வேண்டும். இல்லையெனில் இந்த நான்குபேரையும் கொன்று விடுவோம்' என தீவிரவாதக் கும்பல் மிரட்டியது. இதனைத் தீவிரவாதிகள் ஆதரவு தொலைக்காட்சியான அல் ஜெசீரா வெளியிட்டது.

இவர்களின் மிரட்டலுக்கு அமெரிக்கா உட்பட மற்ற நாடுகள் செவிமடுக்க மறுத்து விட்டதால் முதலில் அமெரிக்கரான பொக்ஸ் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பக்தாத்தின் மேற்குப் பகுதியில் உள்ள ரயில்வே பாதையில் மிகவும் சிதைந்த நிலையில் டாம் பொக்ஸ்சின் உடலை பொலீஸார் கண்டுபிடித்தனர்.

(ஐ)

# கோவா மாநிலத்தில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்

புதுடில்லி,மார்ச் 13

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பு ஒன்று கோவா மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருந்தது தற்போது தெரியவந்துள்ளது.

கேரளாவில் உள்ள எர்ணா குளத்திலிருந்து மர்மகோவா ரயில் நிலையத்துக்கு ரயில் மூலம் வந்த தாரிக் அன்வர் என்பவரைப் பொலீஸார் கைதுசெய்தனர். அவரிடம் இருந்து இரண்டு கிலோ ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து பொருள் உட்பட பல பொருள்களை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரிடம் நடந்த விசாரணையில் தாக்குதல் பற்றிய தகவல் தெரிய வந்தது.

பாகிஸ்தானில் 'தாரி க் - உல் - முஜாஹித்' என்ற தீவிரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பு கோவாவில் உள்ள சுற்றுலாத் தலங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்குத் தேவையான வெடிமருந்துகளை கோவாவுக்கு கடத்தி வரும் பணியில் தாரிக் அன்வர் ஈடுபட்டு வந்துள்ளார். கோவா நகரில் தாக்குதல் நடத்துவது தாரிக் அன்வர் பணி அல்ல. அதற்கு மற்றோர் ஆள் வருவதாக இருந்தது.

இவ்வாறு தாரிக் அன்வரிடம் நடத்திய விசாரணையில் தகவல்கள் கிடைத்துள்ளன. (ஐ)

உலக அரங்கில்

# 10 மாத காலமாகத் தியானத்தில் இருந்த நேபாளச் சிறுவனைக் காணவில்லை!



காத்மண்டு,மார்ச் 13

நேபாளக் காட்டுப் புறத்தில் கடந்த 10 மாதங்களாக உண்ணாவிரதமிருந்து தியானத்தில் ஈடுபட்டுவந்த 16 வயது சிறுவனைக் கடந்த சனிக்கிழமை முதல் காணவில்லை என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவன் தியானத்திலிருந்து வந்த தென்பகுதி பாரா காட்டுப் பகுதியில் பொலீஸாரும் உள்ளூர் அதிகாரிகளும் தேடுதல் நடத்திய போதிலும் இதுவரை சிறுவனைப் பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

'குட்டிப் புத்தர்' என்று உள்ளூர் மக்களால் அழைக்கப்படும் ராம் பொம்ஜன் என்ற இச்சிறுவனை யாரும் கடத்திச் சென்றிருக்கலாம் என்ற கருத்தைப் பொலீஸார் நிராகரித்துள்ளனர்.

சிறுவன் மேலும் அடர்த்தியான காட்டின் உட்புறத்திற்கு அமைதியாக தியானம் செய்வதற்காக சென்றிருக்கலாம் என்று அவனுடைய பக்தர்கள் கூறுகிறார்கள்.

சிறுவன் தியானத்தில் ஈடுபட்டிருந்த இடத்திற்கு தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் அவனைத் தரிசிப்பதற்காக வந்து சென்றவண்ணமிருந்தார்கள்.

சிறுவன் தியானத்தில் இருந்த 10 மாதகாலமும் அவன் உணவோ தண்ணீரோ உட்கொள்ளாமல் இருந்து வந்ததாக அவனுடைய பக்தர்கள் கூறுகின்றனர்.

(ப)

# பாரதீய ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து விஜயகாந்த் கூட்டணி அமைப்பாரா?

## தமிழக தேர்தல் களத்தில் பரபரப்புத் தகவல்

சென்னை,மார்ச் 13

தமிழக சட்ட சபைத் தேர்தலில் நடிகர் விஜயகாந்தின் கட்சி பாரதீய ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து மூன்றாவது அணி அமைப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சட்டசபைத் தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய பெரிய கட்சிகள் கூட்டணிகளை அமைத்துப் போட்டிக்குத் தயாராகி வருகின்றன. இந்த நிலையில் மூன்றாவது அணி எது என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக எழுப்பப்படுகின்றது.

இன்று திங்கட்கிழமை நடிகர் விஜயகாந்த் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேச உள்ளார் என்றும் -

அப்போது இரண்டு கட்சிகளும் கூடி தமிழகத்தில் மூன்றாவது அணி உருவாகுவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் முயற்சி செய்த போதும் அவற்றுடன் கூட்டுச் சேர்வதை நிராகரித்து தனித்துப் போட்டியிடுவது என்ற உறுதியான நிலைப்பாட்டில் நடிகர் விஜயகாந்த் உள்ளார். என்றாலும் பாரதீய ஜனதாக் கட்சியுடன் சேர்ந்து மூன்றாவது அணியை உருவாக்கும் யோசனை குறித்து அவரது தேசிய முற்போக்கு திராவிட கழகம் பரிசீலித்து வருவதாக ஒரு தகவல் வெளியாகி உள்ளது.(ஐ)

# நடிகர் கார்த்திக் - ஜெயலலிதா கூட்டணி குறித்துப் பேச்சு

சென்னை,மார்ச் 13

அகில இந்திய போர்வேட் பிளாக் கட்சியின் பொதுச் செயலாளர் பிஸ்வாஸ், அக்கட்சியின் தமிழக தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் நடிகர் கார்த்திக் ஆகியோர் முதல்வர் ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அ.தி.மு.க. அணியில் சேர்ந்து சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அவர்கள் விவாதித்தனர். மேற்கு வங்க மாநில உணவுத்துறை அமைச்சர் நரேன் தேவும் இச்சந்திப்பின்போது உடன் இருந்தார்.

எனினும் கூட்டணி குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை என்றும், ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் நடைபெறும் போர்வேர்ட் பிளாக் கட்சியின் மாநாட்டில் இது குறித்து விவாதிக்கப்படும் என்றும் செய்தியாளர்களிடம் பிஸ்வாஸ் கூறினார். (ஐ)

**10,500 முதல் - 15,500 வரை**



எம்மிடம் Topfield, Mediucom, Technosal, Dellsal Eurostar, Euroline, Life vision, Kuband Dish அன்ரனா செற்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.V., டெக் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்களை உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

*வாடிக்கையாளர் கவனத்திற்கு*

எதிர்வரும் நாள்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்பதால் உங்கள் T.V., Reciver மின் உபகரணங்களின் மின் மற்றும் அன்ரனா இணைப்புகளை துண்டித்து உங்கள் உபகரணங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

**கிங்ஸ்ரன் எலக்ரோனிக்ஸ்**
**62/30, ஸ்ரான்லி றோட்,**
**யாழ்ப்பாணம்.**
**T.P.: 021 222 3140.**

(47994)(42.11.45)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

762 சிவப்பு

விருச்சிகம்



10-03-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5058547-5072911

வெற்றி இலக்கங்கள் **04 38 49 51**

**ஜக்பொட் பரிசு ரூபா 38,76,050/- வெல்லப்படவில்லை**

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 70,52,010/-
தொடர் இல. 4148989 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 மார்ச் 14 ஆம் திகதி செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,16,378 | 10/- | 31,63,780/- |
| 2 இலக்கங்கள் | 29,048 | 20/- | 5,80,960/- |
| 1 இல+லக்கினம் | 28,684 | 30/- | 8,60,520/- |
| 2 இல+லக்கினம் | 2,620 | 100/- | 2,62,000/- |
| 3 இலக்கங்கள் | 775 | 500/- | 3,87,500/- |
| 3 இல+லக்கினம் | 69 | 5,000/- | 3,45,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | 0 | 38,76,050/- | 0 |
| மொத்தம் | | | 59,99,760/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,77,583 | | 70,52,010/- |

**இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 45,82,700/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்


| | |
|---|---|
| மொனராகலை | 5070317-2-65 |
| கம்பஹா | 5072582-0-15 |
| நுவரெலியா | 5063004-1-13 |
| கொழும்பு | 5062157-7-30 |
| கொழும்பு | 5072331-5-69 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

*தோற்றம்*
*1933 . 08 . 26*



*மறைவு*
*2006 . 02 . 14*

### அமரர் V.P. சற்குணராசா

*(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரியும் சாயி சகோதரரும்)*

நாளை மறுதினம் புதன்கிழமை (15.03.2006) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பு கிடைக்காதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.)

*பிரசாந்தி நிலையம்,*
*தும்பளை, பருத்தித்துறை.*

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(சி/48301)(25-11-45-42)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### பந்தல் விற்பனைக்கு

50 அடி சொக்கட்டான் பந்தல் அதனுடன் கூடிய மணவறை, கதிரைகள், சமையல் பாத்திரங்கள், சில்வர் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: சீ.மகாலிங்கம் (ராசன்), தில்லையம்பதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். T.P. 0776002626. (47900)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது. 1 Kg 240 ரூபா. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு விஜயகுமார், குளப்பிட்டி றோட், உயரப்புலம், ஆனைக்கோட்டை. (48012)

### மணமகள் தேவை

கனடா குடியுரிமையுடைய யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1973 இல்பிறந்த, 5' 3" உயரம், பூரட்டாதி, Computer Cum (Network Engineer) மணமகனுக்கு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் or விஞ்ஞானப் பட்டதாரி பண்புள்ள அழகிய மணமகள் தேவை. தொடர்பு: 021 222 2168, 077 6341541. (47988)


### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்தமா,
வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம், மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
*சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:*

**வேலணை வைத்திய கலாநிதி**
**சி.இராசரத்தினம்**
*121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*
தொலைபேசி எண்: 222 2459

(36228) (14-18-38)


## 300 சிறார்களுக்கு பற்பசை விநியோகம்

தென்மராட்சி,மார்ச் 13

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த 300 சிறார்களுக்கு பற்பசையும் தூரிகையும் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இவற்றினை முன்பள்ளி ஆசிரியைகளிடம் கையளித்தனர். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.தா.சிவபாதம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் வைத்து இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. (எ-117)

## வெடிவிபத்தில் இளைஞனுக்கு கையில் காயம்!

அடையாளம் தெரியாத பொருள் ஒன்றை எடுத்து அதனைப் பார்த்தவேளை அது வெடித்துச் சிதறியதில் அதனைத் தூக்கிப் பார்த்த இளைஞனின் வலது கையில் காயங்கள் ஏற்பட்டன. இச்சம்பவம் சாவகச்சேரி, சரசாலை தெற்குப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இந்த வெடிவிபத்தில் சரசாலை தெற்கைச் சேர்ந்த பூபாலசிங்கம் நிரஞ்சன்(வயது 18) என்பவரே கையில் படுகாயமடைந்தார். இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-31)

## விடத்தற்பளைக்கு மின்சாரம் வழங்கும் ஏற்பாடுகள் துரிதம்

மிருசுவில் விடத்தற்பளை கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கிராமத்திற்கு மின் விநியோகத்தினை மேற்கொள்ள யாழ்.அரச அதிபரினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்திற்கு மின்விநியோகம் கிடைத்து 50 ஆண்டுகள் கடந்த நிலையிலேயே தமது கிராமத்திற்கு மின்விநியோகத்திற்கான வேலைகள் நடைபெற்று வருவதாக விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக விடத்தற்பளை அன்ரனி வீதியிலிருந்து அம்மன் கோயிலடிக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படவுள்ளது என்றும் -

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் இந்த வீதிப் புனரமைப்பினை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் -

அதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கிய நிதியில் கிராமிய அபிவிருத்திச் சங்கக் கட்டடம் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது. (எ-117)


### நெல்சன் சாரதி பயிற்சிப் பாடசாலை

சகல விதமான வாகனங்களையும் சிறந்த முறையில் அனுபவமிக்க பயிற்சியாளர்களால் பயிற்றுவித்து சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள யாழ். மண்ணில் நம்பிக்கையான ஸ்தாபனம்.

**நெல்சன் லேனர்ஸ்**
**NO. 109, கச்சேரியடி**
**Y.M.C.A. கட்டடம்,**
**யாழ்ப்பாணம்**

(48006)(11-45-42)


## எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக உதவியாளர் தரம் - 03 இல் ஆள்சேர்ப்பதற்கான எழுத்துத்தேர்வு எதிர்வரும் 19.03.2006 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணி வரை கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

உரிய பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனும்தி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளைகளில் தங்களது பெயர் விவரங்களைப் பார்வையிடலாம்.

**மனித வள மேலாளர்,**
**மனிதவளப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

(சி/48256)(42-11-45)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் பகுதித் தலைவரும் ஆசிரியருமாகிய

### செல்வி கிருஷ்ணா முத்துக்குமாரு

அவர்கள்

பண்போடு பரிவுங்கொண்ட
கண்ணான எங்கள் கிருஷ்ணா!
விண்ணோடு உறையும் தெய்வம்
கொண்டான் தனக்கேயின்று.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய சோமாஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.*

நலன்புரிக்கழகம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.

*(47967)(42-11-45)*

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
18 - 04 - 1942



இறப்பு
14 - 02 - 1995

### அமரர் தியாகராசா அரசரத்தினம்

(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி காரைநகர்)

திதி: 13.03.2006

*அன்பாலே அரவணைத்து அறிவோடும்*
*பண்போடும் எமக்கு வழிகாட்டி*
*எம்மை ஆளாக்கி வாழ வைத்த*
*அன்புத் தெய்வமே! ஆருயிர் அப்பாவே!*
*ஆண்டுகள் பதினொன்று ஆனாலும்*
*ஆறவில்லை எம் துயரம்*
*எப்போதும் காண்போம் உங்கள் அன்புமுகம்*
*ஏங்கித் தவித்து நிற்கின்றோம்.*

தங்கள் பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

*தொல்புரம்மேற்கு,*
*சுழிபுரம்.*

(48008)(42-11-45)

# கொடிகாமம் பிரதேச மக்களின் அவசர மருத்துவத் தேவைகளுக்கு வசதி செய்க!

தென்மராட்சியின் எல்லைப் பிரதேசத்தில், நகரில் இருந்து தொலைவில் காணப்படும் பிரதேசம் கொடிகாமம். அப்பகுதி மக்களின் உயிரைக்காக்கும், நோயைக் குணப்படுத்தும் தலமாகக் காணப்படுவது மிருசுவிலில் உள்ள கொடிகாமம் மத்திய மருந்தகமும் மகப்பேற்று விடுதியும். இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் சிக்குண்டு கிடந்த இந்த வைத்தியசாலை சிறிது சிறிதாக கெடுபிடியில் இருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு வந்து இயங்கத் தொடங்கியுள்ளது. அப்பிரதேச மக்களுக்கு ஆதாரமாகத் திகழ்வது அது. ஆனால், மக்கள் நம்பும் அளவிற்கு அது அவர்களுக்கு கைகொடுத்து உயிர் காக்குமா என்பது கேள்விக் குறியாக உள்ளது. அதற்கு அங்கு நடந்து வரும் சம்பவங்கள் இப்படியான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

**வைத்தியசாலையின் நிலை**

ஒரு வைத்திய அதிகாரியை (ஓய்வு பெற்று மீள் நியமனம் பெற்ற) மட்டும் கொண்டு இயங்கும் இந்த வைத்திய சாலையை தரம் உயர்த்த அரசு எடுத்த முயற்சியும் கைகூடவில்லை. வைத்திய அதிகாரியோ அந்த வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவோ அதற்கான எந்த முயற்சிக்கும் கைகொடுக்கவில்லை. கிராமத்து நல்ல உள்ளங்கள் சிலரால் வைத்தியசாலைக்கு புத்துயிர் ஊட்ட முயற்சிக்கப் பட்டது.

இங்கு சில நோய்களுக்கான வைத்தியம் நடைபெறுவதுடன், அவசர நிலைமைகளின் போது முதலுதவியுடன் கூடிய அடுத்தகட்ட வைத்தியத்திற்காக நோயாளியை இடம் மாற்றுவதே (தகுந்த இன்னொரு வைத்தியசாலைக்கு, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை அல்லது யாழ். போதனா வைத்தியசாலை) இதன் செயற்பாடு ஆகும். அத்துடன் மகப்பேற்று விடுதியும் காணப்படுவதால் சுகப் பிரசவங்கள் மட்டும் நடைபெறக்கூடியவாறும் உள்ளது. ஆனால், அதற்கு 24 மணித்தியாலங்களும் வைத்தியசாலையில் வைத்தியர்கள் தங்கி இருப்பதில்லை. வைத்தியர் பொதுவாக பகலில் கடமையில் ஈடுபடுவார். அடுத்து இரவு வேளைகளில் மருத்துவ மாதுவே நோயாளிகளைக் கவனிப்பார். சுகப்பிரசவங்கள் இவரது மேற்பார்வையிலேயே நடைபெறுகின்றன. அவசர சிக்கலானவை பெரிய வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படுகின்றன. அவசர நிலைமைகளில் நோயாளியை இடமாற்றுவதற்கு பெரும் சிரமம் பலகாலமாக இருந்து வந்தது.

**அம்புலன்ஸ் கிடைத்தது**

தொடரும் இச்சிக்கலை நிவர்த்தி செய்ய ஊர்வாசிகள் பெரும்பாடுபட்டனர். சில மாத காலத்திற்கு முன்னர் சிறுபிள்ளை ஒன்றை அவசர சிகிச்சைக்கு அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றுவதில் ஏற்பட்ட காலதாமதத்தில் அந்த நோயாளி உயிரிழந்துள்ளார். இப்படியான பல பிரச்சினைகளால் தொலைவில் உள்ள அக்கிராமத்திற்குப் போக்குவரத்துப் பிரச்சினை பெரும் தலையிடியாக இருந்தது. அப்போது 'யுனிசெவ்' நிறுவனம் புதிய அம்புலன்ஸ் ஒன்றை சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கியது. அங்கிருந்த அம்புலன்ஸ் யாழ். பிரதிமாகாண சுகாதாரப் பணிமனைக்கு அனுப்பப்பட்டது. கிராமத்தவரின் பெரும் முயற்சியால் அந்த அம்புலன்ஸ் வண்டி பின்னர் கொடிகாமம் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது.

அம்புலன்ஸ் வழங்கப்பட்டதன் அடிப்படை நோக்கங்கள்:-

✱ மிகவும் தொலைவில் உள்ள வைத்தியசாலை என்பதால் அவசர நிலைமைகளில் நோயாளியை பெரிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக இடமாற்றும் போது ஏற்படும் தாமதங்களைத் தடுப்பது-

✱ அப்பிரதேசத்தில் நோயாளிக்கு ஏற்ற பொருத்தமான வேறு வாகனங்களை ஒழுங்கு படுத்துவது கடினம்.

✱ அவ்வாறு ஒழுங்குபடுத்தினாலும் நோயாளர் அதிகளவு பணம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆனால், பொதுவாக அப்பிரதேச மக்கள் அவ்வளவு பணம் கொடுக்கக் கூடிய வலுவில் இல்லை.

✱ வன்னிப் பிரதேச மக்கள் (குறிப்பாக பளைப்பிரதேசம்) முகமாலை ஊடாகவரும் போது முதலில் இருப்பது இந்த வைத்தியசாலை. அப்பிரதேச மக்களுக்கு முதலில் கைகொடுக்க வேண்டியது இவ் வைத்தியசாலை.

✱ நோயாளியை நீண்ட தூரம் கொண்டு செல்லும் போது நோயாளிக்குரிய அடிப்படை வசதி அவ்வாகனத்தில் இருத்தல் வேண்டும்.

எனவே வைத்தியசாலை நோயாளியை முதலுதவியுடன், பொருத்தமான இடத்திற்கு இடமாற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கே முக்கியத்துவம் வழங்கவேண்டிய தேவை காணப்பட்டது. எனவே அம்புலன்ஸ் ஓட்டுநரும் அப்பிரதேச வாசியாகவே தெரிவு செய்யப்பட்டார்.

**நோக்கும் பிரச்சினை**

ஆனால், அது எதிர் நோக்கும் பிரச்சினை என்னவென்றால், அதன் முதலாவது சேவை, தேவை என்னவோ, அது நிறைவேற்றப்படுகிறதா என்று சிந்திக்க வைக்கிறது.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று அப்பால்நாற் கூற்றே மருந்து" என்கின்றது திருக்குறள். நோயுற்றவன், அதனைத் தீர்ப்பவன், அவன் தரும் மருந்தினது அமைதி, நோயாளியோடு உதவியாகச் செயற்படுபவர்கள் எனும் நான்கு பிரிவுகளே மருந்து நெறி உடையதாகும் என்கிறது திருக்குறள்.

வைத்தியர் தன்னால் இயலாத ஒரு நிலைமையில் அல்லது மேலதிக சிகிச்சைக்கு வசதியீனம் இருக்கும் போது நோயாளியை சரியான முறையில், சரியான நேரத்தில் மேலதிக சிகிச்சைக்கு இடமாற்றம் செய்ய வேண்டும். ஆனால் இதுவும் திருத்தமாக நடைபெறுவதில்லை. அவ்வைத்தியசாலைக்கு எதற்காக அம்புலன்ஸ் தருவிக்கப்பட்டதோ அது நிறைவேற்றப்படுவதில்லை. இதற்கு அண்மையில் நடந்த சம்பவம் மிகச்சிறந்த உதாரணம்.

**உதாரணத்திற்கு ஒன்று**

அன்று பகல் ஆட்டுக் கொம்பு குத்திக் கண்ணில் காயம் அடைந்த நிலையில் வந்த அப்பிரதேச நோயாளியை சோதித்த கொடிகாம வைத்தியசாலை வைத்திய அதிகாரி மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கெண்டு செல்லுமாறு பணித்து கடிதம் கொடுத்துள்ளார். படுகாயமடைந்து இரத்தம் ஒழுக ஒழுக நீண்டதூரம் பிரயாணம் செய்வதற்கு, நீண்ட நேரம் எடுக்கும். அத்துடன் கூடிய குருதிப்பெருக்கு ஏற்பட்டு நோயாளிக்கு ஆபத்தும் ஏற்படும். தனியார் வாகனத்திற்கு அதிக பணமும் செலவாகும். அப்போது அங்கு அம்புலன்ஸ் வண்டி இருந்தது. ஓட்டுநரும் இருந்தார் அவர்களுக்கு அவசர வேலைகள் வேறு எதுவும் இருக்கவில்லை. எனவே, வைத்தியர் அம்புலன்ஸ் வசதி செய்து கொடுத்திருக்கவேண்டும். கொடுக்கவில்லை. ஆனாலும் உறவினர்கள் அம்புலன்ஸ் வசதி செய்து தரும்படி கேட்டார்கள்.

அவர்கள் பின்னர் தனியார் வாகனம் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நோயாளியைக் கொண்டு சென்றபோது நிலைமையை அறிந்த சாவகச்சேரி வைத்தியசாலை வைத்தியர் அவர்களது அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பி வைத்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றாலும் இவர் தனது கண் பார்வையை இழக்க வேண்டிய நிலை உள்ளது. இப்படியான மருத்துவத்துறையினரது அசமந்தப்போக்கால் அப்பகுதி மக்கள் பெரிதும் விசனமடைந்து உள்ளனர். பகல் நேரத்தில் கூட அம்புலன்ஸ் தந்து உதவாதவர்கள் எப்படி இரவு நேரத்தில் ஆபத்திற்கு உதவப் போகிறார்கள் என மக்கள் அஞ்சுகின்றனர்.

ஆபத்தான சந்தர்ப்பத்தில் நோயாளி வீட்டில் இருந்தவாறே தொலைபேசி மூலம் கூறினால் கூட அம்புலன்ஸ் வீடு வந்து நோயாளியை கூட்டிச் செல்லும் என அண்மையில் யாழ்ப்பாண பிரதி மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அம்புலன்ஸ் ஓட்டுநர் இதற்காக கைத்தொலைபேசி தனது செலவில் வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**செய்திக்கட்டுரை**
**லோ.துஷிகரன்.**

இது பற்றி மக்கள் பிரதி நிதிகள் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு எதிராக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளருக்கு மனு அனுப்பியுள்ளனர்.

இதுபற்றி யாழ்ப்பாண மாகாண சுகாதார சேவையின் நிர்வாக உத்தியோகத்தர் கருத்து தெரிவிக்கையில் "கட்டுப்பாடற்ற முறையில் அம்புலன்ஸ் போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது." என்று கூறினார். அது பற்றிய சுற்றறிக்கையும் சகல ஆஸ்பத்திரிகளுக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கடந்த வாரம் இரவு இப்பிரதேசத்தில் கட்டுத் துவக்கு வெடித்து காயமடைந்தவர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லத் தாமதமானதாலேயே பரிதாபமாக உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. காரணம் அப்பகுதியில் போக்கு வரத்து வசதியீனம் காணப்படுகின்றது.

இப்படியான சம்பவங்களால் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

✱

# விளம்பரம் இன்றி, விண்ணப்பம் கோராமல் பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமனம்

தற்போது அதிபர் சேவையில் உள்ளவர்கள் எண்ணிக்கை போதாமலிருப்பதால் பாடசாலைகளுக்குத் தற்காலிக அதிபர்கள், ஆசிரியர்கள் சேவையிலிருந்து நியமிக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட நியமனங்களைச் செய்யும்போது பத்திரிகையில் விளம்பரம் செய்து ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்று நேர்முகப்பரீட்சை வைத்தே பாடசாலைகளுக்கு அதிபர்கள் (தற்காலிக) நியமிக்கப்பட்டனர்.

இப்படித்தான் செய்யும்படி மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளதாகக் கூறினர்., எந்த நியமனத்தையும் விளம்பரப்படுத்தி நேர்முகப்பரீட்சை வைத்தே நியமனம் செய்யும்படி மாகாணக் கல்வித் திணைக்களம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளதாக கல்விப் பணிப்பாளர்கள் கூறினர். நாமும் அதனை நன்கு வரவேற்றோம்.

ஆனால், இடையிடையே சிலசில பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கும் போது எதுவித விளம்பரப்படுத்தலும் இல்லாமலும் நேர்முகப் பரீட்சை வைக்காமலும் ஆசிரிய சேவையிலுள்ளவர்கள் அதிபர்களாக பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். அதனை விரிவாக ஆராய்ந்து பார்த்தால் அதிபராக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் கல்விப் பணிப்பாளர்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவர்களாகவும் விளம்பரப்படுத்தி நேர்முகப் பரீட்சை வைத்தால் எக்காரணம் கொண்டும் அதிபர் நியமனம் கிடைக்க முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். அத்துடன் கல்விப் பணிப்பாளர்களுக்குப் பந்தம் பிடிக்கக்கூடியவர்களாகவும் வேறுவிதத்தில் அவர்களின் தேவைகளைத் திருப்திப்படுத்தக் கூடியவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

## மக்கள் மன்றம்

எந்த ஓர் ஆசிரியராவது அதிபராக நியமிக்கப்படும்போது தகுதி, தராதரம் உள்ளவரா? என்பதை நோக்கவேண்டுமே தவிர தனது தேவைகளைத் திருப்தி செய்து தனது கைப்பொம்மையாக இருப்பவரே நியமிக்கப்பட வேண்டும் என்று நினைத்தால் எப்படி குடாநாடு கல்வியில் முன்னேறமுடியும்? சில மாதங்களுக்கு முன் குறித்த பாடசாலை ஒன்றுக்கு விளம்பரப்படுத்துவார்கள், விண் ணப்பம் போடுவோம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது அப்பாடசாலைக்கு எதுவித நேர்முகப் பரீட்சையும் வைக்காது கைப்பொம்மை ஆசிரியரை அதிபராக நியமித்துள்ளனர். அப்பா டசாலைக்கு விளம்பரம் கோரியிருந்தால் பல ஆசிரியர்களும் அதிபர் தராதரம் உள்ளவர்களும் விண்ணப்பித்திருப்பார்கள். இதனை எவரும் மறுக்கமுடியாது.

இன்னும் ஒரு பாடசாலைக்கு அதிபர் இல்லாமல் போனதும் அதனையும் விளம்பரப் படுத்தாமல் கல்விப் பணிப்பாளருக்கு மிகவும் வேண்டிய ஒரு சிறிய பாடசாலை அதிபர் தராதரத்திலுள்ள ஒருவரை அப்பாடசாலைக்கு இடமாற்றிவிட்டு தற்போது அந்தச் சிறிய பாடசாலைக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பத்தைக் கோரி பத்திரிகையில் விளம்ப ரப்படுத்தியுள்ளனர். ஏன் அந்த அதிபரை இடமாற்றம் செய்யாமல் அந்தப் பாடசாலைக்கும் விளரம்படுத்தி விண்ணப்பம் கோரியிருக்கலாம் தானே.

எனவே, கல்விப் பணிப்பாளர்கள் தாம் நேர்மைப்படியே நடக்கின்றோம் என்று இதே பத்திரிகையில் தமது கருத்தை வெளிவிடுவார்களாயின் எந்த எந்தப் பாடசாலைக்கு எதுவித விளம்பரப்படுத்தலும் நேர்முகப்பரீட்சையும் வைக்காமல் அதிபர்களை நியமித்தார்கள் என்பதைப் பட்டியல்படுத்திக் காட்டுவோம்.

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரும் இதற்கு உடந்தையாகாமல் நேர்மை, நீதியை நிலைநாட்டவும் எந்த ஒரு பாடசாலைக்கும் அதிபர் வெற்றிடம் வந்தால் வேறு ஓர் அதிபரை அப்பாடசாலைக்கு இடமாற்றாமல் விண்ணப்பம் கோரி, நேர்முகப் பரீட்சை வைத்து அதிபரை நியமிப்பதே நேர்மையும் நீதியுமாகும். நேர்முகப் பரீட்சையில் அதிபர் தராதரமுடையவரும் வரலாம்.

இவை பற்றி மாகாண கல்வித்திணைக்களமும், குடாநாட்டு கல்வியில் ஆர்வமுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கூடிய கவனமெடுத்து இப்படிப்பட்ட கல்விப்பணிப்பாளர்களின் செயற்பாட்டை முற்றாகத் தடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவை பற்றி ஆர்வமுள்ள வாசகர்களிடமிருந்தும் கருத்துகளை எதிர்பார்க்கின்றோம்.

**கம்பன்**

## வாசகர் திருமுகம்

# பலாலியிலும் முகமாலையிலும் 'எய்ட்ஸ்' சோதனை அவசியம்

'பறவைக் காய்ச்சல் பீதி' உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்க சத்தமில்லாமல் யாழ்ப்பாணத்தை எய்ட்ஸ் நோய் விழுங்கிக் கொண்டிருக்கிறது. அண்மையில் இருவர் யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதுவரையில் 38 பேர் எய்ட்ஸ் நோயாளிகள் மருத்துவமனை வழியாக இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 22 பேர் இறந்துவிட்டனர். தற்போது இலங்கை தீவளாவிய ரீதியில் (**Island Wide**) அதிகளவு எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்ட இரண்டாவது மாவட்டமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. முதலாவது இடத்தில் பல்லின கலாசார அமைப்பைக் கொண்ட கொழும்பு மாவட்டம் இருக்கிறது.

'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் தனிப் பெரும் கலாசாரத்தைப் பேணும் நம்மவர் மத்தியில் இச் சமூகச் சீரழிவு நோய் ஆழ வேரூன்றி உள்ளமை கவலைக்குரிய விடயமே!

மேலைத்தேய நாடுகளிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வெளிநாட்டவரே (முக்கியமாக புலம் பெயர்ந்தோர்) யூரோக்கள், டொலர்களை மட்டுமல்லாது இந்நோயையுமே காவி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு இரு வழிகளுனூடாக எய்ட்ஸ் ஊடுருவுகின்றது.

1) ஏ - 9 வீதி   2) பலாலி விமான நிலையம்

தற்போதைய நிலையில், மேலும் எய்ட்ஸ் நோயாளிகள் உள்நுழைவதைத் தடுக்கும் முகமாக, முகமாலையிலும் பலாலியிலும் குருதிப் பரிசோதனை மையங்களை நிறுவி வெளிநாட்டுப் பயணிகளின் குருதியைப் பரீட்சிப்பதன் மூலம் எய்ட்ஸ் நோயாளர் (காவிகள்) யாழினுள் நுழைவதைத் தடுக்க முடியும்.

மேலும், இந்நோயின் தாக்கத்தினால் மரணங்கள் சம்பவித்து விட்ட நிலையிலும் சுகாதாரப் பகுதியினர் இது தொடர்பில் பெரியளவில் முயற்சிகளை மேற்கொள்ளாமல் இருப்பது கண்டனத்திற்குரியதே! குறிப்பாக எய்ட்ஸ் தொற்றுகை தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரங்கள் இன்னும் வலுப்பெறவில்லை.

சுகாதாரப் பகுதியினரும், அரசசார்பற்ற நிறுவனங்களும், ஏனைய பொது அமைப்புகளும் இதுபற்றி கவனமெடுத்து மருத்துவ மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முடுக்கிவிடுமாறு தாழ்மையுடன் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**சில்லாலை.**   றெ.பி.மரியபு[illegible]

# UDUVIL GIRLS' COLLEGE

Invites parents and well-wishers to their
Annual Junior School Sports Meet
On
Tuesday, March 14th, 2006, 1 p.m.

**Principal, staff & Students.**

(C/48275) (24)



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

13.03.2006



செல்வி சுஜானா

மந்துவிலைச் சேர்ந்த
**ரவிச்சந்திரன் - கோபிகா தம்பதியரின்**
செல்வப் புதல்வி **சுஜானா**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.03.2006)
திங்கள் கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
செல்வி சுஜானாவை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா,
அம்மம்மா, தர்சா சித்தா, லோரா சித்தா, நோர்வேயில்
வசிப்பவர்களான குட்டிச் சித்தா, குகன் மாமா, சேந்தன் மாமா,
சுவிஸில் வசிப்பவர்களான தாத்தா, பாட்டி, உமா அன்ரா,
ஏகலைவன் மாமா, ஜேர்மனியில் வசிக்கும் அத்தை குடும்பம்,
பெரியத்தை குடும்பம் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் சுஜானாவை இறைவன் அருள்பெற்று
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**குகன் மாமா** *(நோர்வே).*

(47951) (39-11-24)



# In Rememberance of The Late Aloysysius Ratnasingham



On the 3rd Month of his passing away suddenly in Toronto Canada. Husband of Lynette. Beloved father of Kulendran, Sylveryn and Sheryn. Father - in Law of Sharmini, Ruvan de soysa and Lorenzo Schiavone. Cherished grandfather of Cameron. Brother of Suhirtham, Julianna and the late Rasam, Rose and Pushpam.

Entombment took place at Holy Cross Gemetery on December 17,2005. The family wishes to thank all relatives and friends who sent messages of condolences, flowers and also donations to the Provident Centre in Toronto, Canada in memory of Aloy. A requiem mass will be offered at Saint Mary's Cathedral in Jaffna on 14th. March 2006, 15 0a.m.

Born on September 29,1927

Died December 13,2005

16, Martyn Rd.,
Jaffna.

(47987) (24)

Mrs. Lynette Ratnasingham
2015, Lawrence Ave. E,
762, Toronto Ont.,
MIR 5H2 Canada.



# 21ஆவது ஆண்டு நினைவலைகள்

அமரர்

## துரைசிங்கம் சரவணன்துரை



(மாணவன் - அச்சுவேலி மத்திய கல்லூரி)

மலர்வு 27.04.1971

உதிர்வு 13-03-1985

பேசும் குரல் எல்லாம் உன் குரலாய் கேட்குதையா!
வீசும் இளங்காற்றும் உன் விம்பம் சுமக்குதையா!
பாசம் எல்லாம் மறந்து பரமன் அடி சேர்ந்துவிட்டாய்!
மாறாது என்றென்றும் மறக்காது எம் நெஞ்சு.

திருச்செந்தூர்,
நாவற்காடு,
அச்சுவேலி.

(C/48275) (24.11)

அப்பா, அம்மா,
பெரியம்மா
குடும்பத்தினர்.



# விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் அன்பு அஞ்சலி

கருவறையில் 12 . 10 . 1989

கல்லறையில் 11 . 02 . 2006



## செல்வன் செல்வசீலன் அகிலன்

(உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவன்,
யாழ். இந்துக்கல்லூரி மாணவன்)

"ஜீவியத்தில் அவரை அன்பு செய்தோம்,
மரணத்திலும் இனிமையுடன் நினைவு கூருகிறோம்"

அன்பின் உருவாய் மலர்ந்தாய்
அருளின் வடிவாய் திகழ்ந்தாய்
இனிய நினைவாய் வளர்ந்தாய்
துன்ப இருளில் மறைந்தாய்
அகிலன் உன்னை யாம் மறவோம்.

எங்கள் அன்புச் செல்வம் நோயுற்ற வேளையில் உதவி புரிந்த மருத்துவ சமூகத்தினருக்கும், மதகுருமாருக்கும் ஆறுதல் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அவரின் விண்ணக யாத்திரை நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(47966) (51.24.11)

இராமலிங்கம் வீதி,
உடுவில், சுன்னாகம்.

நெஞ்சம் நெகிழ்ந்துருகும்
குடும்பத்தினர்.



International Federation
of Red Cross and Red Crescent Societied

# SRI LANKA RED CROSS SOCIETY, KILINOCHCH BRANCH
## JOB ADVERTICEMENT

Sri Lanka Red Cross Society, Kilinochchi branch seeks suitable candidates for the following positions for the Movement Field Coordination Office (MFCO) of the International Federation of the Red Cross and Red Crescent Socicties (IFRC) based in Kilinochchi.

*Positions*

1. Support Services officer (1)
2. Office Assistant (1)
3. Security Guards (4)

### Qualifications required

01. Support services Officer.

a. A high degree competence in Team work; Commitment to the Red Cross & Red Crescent Movement; Integrity & personal conduct; sensitivity to diversity; flexibility & Adaptability; Initiative & direction; interpersonal skills; resilience.
b. A high degree competence in Leadership; monitoring; supervision and control; Communication; networking; management of self; management of others.
c. Experience in working for the Red Cross & Red Crescent and Experience of managing & supporting staff.
d. Experience in Computer skills and Fluency in English, Tamil & Sinhala.
e. In good mental & Physical health.

02. Office Assistant

a. Educational Qualification G.C.E.(A/L)
b. Experience in Team work; Commitment to the Red Cross & Red Crescent Movement; Integrity & personal conduct; sensitivity to diversity; flexibility & Adaptability; initiative & direction; interpersonal skills; resilience.
c. Experience in working for the Red Cross & Red Crescent Movement.
d. Experience in Computer skills and Fluency in English, Tamil & Sinhala.
e. In good mental & Physical health

03. Security Guards

a. Educational qualification G.C.E.(O/L)
b. Experience in working for the Red Cross & Red Crescent Movement.
c. In good mental & Physical health

Please forward your application before 2006 March 21st to the Branch Executive Officer, SriLanka Red Cross Society, Kannan Temple Road, Kilinochchi.

**K.Ganes,**
Hon.Secretary,
Sri Lanka Red Cross Society,
Kilinochchi Branch.

(C/48292)(42)

# வீடுகள் சேதமடைந்தமைக்கான கொடுப்பனவை மாத இறுதிக்குள் வழங்குவதற்கு செயலகம் ஏற்பாடு

## ரூ.1,500இற்கு மேல் மாத வருமானம் பெறும் குடும்பங்கள் இதனைப் பெறமுடியும்

வலி.மேற்கு,மார்ச்13

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 500 ரூபாவிற்கு மேற்பட்ட தொகையை மாதாந்த வருமானமாகப் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் வீடு சேதத்திற்கான நஷ்டஈடு இந்த மாத இறுதிக்குள் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட செயலகப் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டக் கிளையினர் மேற்கொண்டுள்ளனர்.சுமார் ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு இந்த நஷ்டஈடு வழங்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இந்த நஷ்டஈட்டுக்கொடுப்பனவுக்கான காசோலைகள் தற்போது எழுதப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு நஷ்டஈட்டைப் பெறவுள்ள ஆயிரத்து 800 குடும்பங்களுள் பெரும்பாலான குடும்பங்கள் ஓய்வூதியம் பெறுகின்ற குடும்பங்கள் என்றும் கூறப்பட்டது.

இந்தக் குடும்பங்கள் சேதமடைந்த தமது வீடுகளைத் திருத்தியமைப்பதற்கென கடந்த வருடங்களுக்கு முன்னர் நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களைப் பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பித் திருந்தமை தெரிந்ததே. (எ-175)

## கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் படையினர் சிரமதானம்

சாவகச்சேரி,மார்ச்13

கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை வளாகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி, கைதடி, நுணாவில் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரால் சிரமான மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

படையினர் காலை முதல் பிற்பகல் வரை சிரமதானப் பணியை மேற்கொண்டதுடன், வைத்தியசாலை வளாகத்தில் காணப்பட்ட கழிவுப் பொருள்களை படையினர் தமது உழவு இயந்திரங்களில் ஏற்றி அப்புறப்படுத்தினர்.

இதேவேளை - நுணாவில் முகாம் படையதிகாரிகளால் வைத்தியசாலைக்கென 10 தென்னம்பிள்ளைகளும், ஒரு மின்சார அடுப்பும் படையதிகாரியினால் அன்பளிப்புச் செய்யப்பட்டன என்றும் - தெரிவிக்கப்பட்டது.(எ-31)

# தொடர்ந்து பெய்யும் மழையினால் புகையிலைச் செய்கையில் பாதிப்பு

கோப்பாய்,மார்ச்13

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையினால் புகையிலை, வெங்காய பயிர்ச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

நன்கு வளர்ச்சியடைந்துள்ள புகையிலைக் கன்றுகள் மழை நீரினால் கழுவப்படுவதால் அதன் காரத்தன்மை இழக்கப்படுவதாகவும் -

அத்துடன், மஞ்சள் புள்ளி ஏற்படுவதாகவும் - விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். மேலும் - தொடர் மழையினால் வெங்காயப்பயிர்களையும் அறுவடைசெய்ய முடியாதுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை - கடந்த டிசெம்பர் மாதம் பெய்த தொடர் மழையையடுத்து அநேகமான விவசாயிகள் புகையிலைச் செய்கையைக் கைவிட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-72)




## வலி. கிழக்கில் மீண்டும் பாதீனியத்தின் தாக்கம்

கோப்பாய்,மார்ச்13

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையையடுத்து வலி. கிழக்கில் பரவலாக பாதீனியக் களைகள் மீண்டும் பெருமளவில் முளைத்து வளர ஆரம்பித்துள்ளன.

இவை வீதியோரங்கள், வயல்கள், தோட்ட நிலங்கள், வடிகால் பகுதிகள் ஆகியவற்றில் அதிகமாக முளைத்திருந்தமையை அவதானிக்க முடிகிறது.

கடந்த வருடத்தில் பாதீனியம் களைகளைப் பரவலாக அழிப்பதற்கு போதிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படாமையினாலேயே இம்முறை அதிகளவில் களைகள் பெருகியுள்ளன என்று அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (எ-72)



புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடை பெற்ற விளையாட்டு விழாவை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்ப தையும் மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்வதையும் படங்களில் காணலாம். அதிபர் எஸ்.தர்மகுலசிங்கமும் படத்தில் உள்ளார். (படங்கள்: புங்குடுதீவுச் செய்தியாளர்)

# மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதிசெய்யவே பிரஜைகள் குழுக்கள்

## வலி.மேற்கு உதவிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

வலி.மேற்கு,மார்ச்13

நெருக்கடி நிலவும் காலங்களில், குறிப்பாக காணாமல்போகின்ற இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொது மக்களினதும் மனித உரிமைகளைப் பேணுவதற்காகவே பிரதேச மட்ட பிரஜைகள் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் வலி. மேற்கு உதவிப்பிரதேசசெயலர் திருமதி பாபு தேவந்தினி.

வலி. மேற்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேசமட்ட பிரஜைகள் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உதவிப் பிரதேச செயலர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

பிரதேசத்தில இடம்பெறும் சகல தரப்பினரதும் மனித உரிமை மீறல்களை இந்தக் குழுவினர் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரியப்படுத்தி மக்களின் மனித உரிமைகளைப் பேணிக் காக்கமுடியும்.

பிரதேச மட்ட பிரஜைகள் குழு தன்னிச்சையாகச் செயற்பட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு பிரதேசத்தில் இடம்பெறும் கைதுகள், காணாமற்போகின்றவர்களின் விவரங்களைத் தெரிவித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

எனவே, செயற்படக்கூடிய செயற்றிறன் மிக்க நிர்வாகம் ஒன்றினைத் தெரிவுசெய்ய வேண்டும் - என்றார்.

இறுதியில் 14 பேர் கொண்ட நிர்வாக சபையொன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.

பிரஜைகள் குழுவின் தலைவராக க.விசுவநாதனும், உபதலைவராக கு.சண்முகரத்தினமும், செயலாளராக வி.அ.துரைசிங்கமும், உப செயலாளராக பொன்.காங்கேயநாதனும், பொருளாளராக கி.பூபாலசிங்கமும் -

நிர்வாகசபை உறுப்பினர்களாக கோ.சிங்கராசா, சி.அருணகிரிநாதன், வே.குமரகுரு, செ.கோபாலகிருஷ்ணன், பொன்.சாம்பசிவம், எஸ்.சிவப்பிரகாரம், வ.நவரத்தினம், வி.கே.விஜயரத்தினம், என்.ஜெயரஞ்சிதன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-175)

# வல்லிபுரக் கோயிலுக்குச் சமீபமாக படையினர் புதிதாக முகாம் அமைப்பு

கரவெட்டி,மார்ச் 13

வடமராட்சி வல்லிபுரக் கோயிலுக்கு அண்மையில் உள்ள வலிக்கண்டி என்னும் இடத்தில் புதிதாக இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முகாம் நிறுவப்பட்டதையடுத்து கனரக வாகனங்கள் அடிக்கடி இவ்வீதிகளில் பயணம் செய்கின்றன. இதனால், வீதிப் போக்குவரத்தில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - மணற்காட்டுப் பகுதியிலும் படையினரால் மினி முகாம்கள் பல அமைக்கப்பட்டுள்ளன என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், அங்கு படையினரின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்றும் - இதனால், மக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழித்து வருகின்றனர் என்றும் - அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (எ-70-204)

## பாவனைக்கு உதவாத இறைச்சி விற்றவருக்கு ரூ. 3ஆயிரம் அபராதம்

தென்மராட்சி,மார்ச் 13

நாவற்குழியில் பாவனைக்குதவாத இறைச் சி விற்பனை செய்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான் இவ் அபராதத்தினை விதித்தார். (எ-117)



வரணி மகாவித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட இருமாடிக் கட்டடத்தினை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் உட்பட விருந்தினர்கள் காணப்படுகின்றனர்.. (படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)

# சங்கானை ஆஸ்பத்திரியிலும் விசேட நிபுணரின் சேவை கிடைக்க ஆவன செய்யக் கோரிக்கை

## வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்தது

வலி.தென்மேற்கு, மார்ச் 13

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர்கள் வாரத்தில் ஒரு தினமேனும் வந்து நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

சுற்றயல் கூறு தரத்திலிருந்த இவ் வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டிருப்பதால் வாரம் ஒரு முறை விசேட வைத்திய நிபுணர்கள் வந்து சேவையாற்றக் கூடிய வகையில் ஏற்பாடு செய்து தருமாறு சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் பொன்.சாம்பசிவம் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-135)

# தவக்காலச் சிந்தனை 14

## பணிவு மட்டுமே நற்பெருமை தரும்

பொது மதிப்பு, கௌரவம், புகழ், முன்னுரிமை, அந்தஸ்து என்பன ஒருவரைத் தேடி வரும்படியாக அவரது வாழ்வும் செயலும் அமையவேண்டும். ஆனால், இன்று இவற்றை மனிதன் வலிந்து தேடி அலைகிறான். போட்டிகள், சூழ்ச்சிகள், முகஸ்துதி, பண வலிமைகள் இவைகளே இவற்றை நிர்ணயிக்கின்றன. இந்த வெளிவேடப் பிரமுகர்கள் பல சட்டங்களைக் கூறுவார்கள். ஆனால், தாம் கடைப்பிடிக்கமாட்டார்கள்.. தற்பெருமையையே குறிக்கோளாக இருக்கிறது.

உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்கவேண்டும். தம்மைத் தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப் பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவர்.
(மத். 23:11-12)

எல்லோரும் முதலிடம் பெற வேண்டுமெனில் பணிவிடை புரிவது யார்? தன்நிலை துறந்து தாழ்ச்சியுடன் பணிபுரிந்து மக்களின் நன்மதிப்பைப் பெறுவோம். உலக மகிமையில் பெருமை பாராட்டாது உள்ளத்தால் உணர்ந்து ஊழியம் புரிவோம். பிறர் பார்க்கவேண்டும், போற்ற வேண்டும் என்ற உணர்வு மனப்பாங்கிலிருந்து இறங்கி அவர்களை நாம் கவனிக்க வேண்டும்; அரவணைக்க வேண்டும். தாழ்மையென்னும் ஆடையை அணிந்து மேன்மைமிகு நிலையை விண்ணுலகில் அடைவோம். முன்னுதாரண வாழ்வு எமக்கு முதன்மையைப் பெற்றுத்தரும்.

- எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

# மட்டுவில் விநாயகர் ஆலயத்தில் இன்று பண்டிதமணியின் சிரார்த்த தின நிகழ்வு

சாவகச்சேரி,மார்ச்13

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் சிரார்த்த தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மட்டுவில் மருதடி தான்தோன்றி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா ஏற்பாடு செய்துள்ள இந்த சிரார்த்த தின நிகழ்வு நா.நல்லதம்பி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ லக்ஷ நாம நாதக் குருக்களும், தொடக்கவுரையை ஆசிரியர் ச.லலீசனும், பேராசிரியர் அ.சண்முகதாஸ், 'பண்டிதமணியின் தமிழ் நடை' என்னும் பொருளில் நினைவுப் பேருரையும் நிகழ்த்த நினைவுரைகளை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், ஓய்வுபெற்ற அதிபர் அ.நடராசா, அதிபர்களான செ.சுப்பிரமணியம், செ.பேரின்ப நாதன், செ.சிவஞானம், ஓய்வு பெற்ற உப அதிபர் செல்வி நா.முத்துக்குமாரு, மட்டுவில் இந்து இளைஞர் மன்ற செயலாளர் க.ஈஸ்வரன் ஆகியோரும் நிகழ்த்துவர். (எ-31)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான
03.03.2006 முதல் 13.03.2006 வரையான
இலட்ச சங்காபிஷேக - இலட்சார்ச்சனை பூர்த்திவிழா

13.03.2006 திங்கள் காலை 5 மணியளவில் (மாசிமகம்) ஆரம்பமாகி நண்பகல் 12 மணியளவில் அம்பாள் உள், வெளி வீதி உலாவந்து ஆலய புஷ்கரணியில் தீர்த்தமாடும் நிகழ்வில் பக்த அடியார்கள் அனைவரும் கலந்து அம்பிகையின் அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய நிர்வாகிகள்,
100 உபயகாரர்.

(சி/48307) (18-24-17)



யாழ். மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்...!

விசேட மருத்துவ முகாம்

கொழும்பு அப்பலோ வைத்தியசாலை, மருத்துவ முகாம் ஒன்றினை இம்மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் 272, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அப்பலோ வைத்தியசாலையின் தகவல் நிலையத்தில் நடத்தவுள்ளது. இம் மருத்துவ முகாமில் கீழ்க்காணும் நோய்களுக்கான வைத்திய நிபுணர்களை நீங்கள் சந்திக்கலாம்.

01. இருதய வைத்திய நிபுணர் (Cardiologyest)
02. நரம்பியல் வைத்திய நிபுணர் (Neuro Physician)
03. குழந்தை மருத்துவ நிபுணர் (Paediatrics)
04. பொது வைத்திய நிபுணர் (General Physician)
05. சத்திர சிகிச்சை நிபுணர் (Surgeon)

மேற்படி மருத்துவமுகாமில் சிகிச்சைபெற விரும்பும் நோயாளர்கள் தங்களுக்கான முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
அப்பலோ வைத்தியசாலை,
தகவல் நிலையம்,
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:. 021 4590500

(சி/48306) (24-17)



உ
ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

7ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
இராமகிருஸ்ணன் நாகராசா
திதி: சதுர்த்தசி

மலர்வு 01-06-1949
உதிர்வு 01-03-1999

ஆல விருட்சமாய் எம்மைத் தாங்கிய
அன்புத் தெய்வமே அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

ஸ்ரீலக்சுமி ஜுவலர்ஸ்,
220 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (48013) (24/17)






சீட்டிழுப்பு இல.
1692

11.03.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

07 09 18 30 09

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 300955862 இலிருந்து 300971449
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 2,14,70,050/-வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 2,14,70,050/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 19 | 5,000/- | 95,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 425 | 1,000/- | 4,25,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,362 | 500/- | 6,81,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,271 | 40/- | 8,10,840/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,059 | 20/- | 3,81,180/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,88,410 | 10/- | 28,84,100/- |
| மொத்தம் | | | 62,77,120/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,29,552 | | 68,77,120/- |

தொடர் இல. 201028146 க்கு மேற்பட்ட ஷனிதா நிற டிக்கெட்டுக்கள் 2006 மார்ச் 15 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 2,22,40,200/-

| | |
|---|---|
| [illegible] | 300967239-7-69 |
| இரத்தினபுரி | 300958035-5-41 |
| மாத்தறை | 300959838-6-55 |
| திருகோணமலை | 300956113-9-83 |
| மொனராகலை | 300962552-4-31 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


# கிராம அபிவிருத்திச் சங்க சமாசம் புனரமைப்பு

தென்மராட்சி,மார்ச்13

தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகத்தினர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் க.சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டார்.

சங்கத்தின் தலைவராக ச.தங்கராசாவும் செயலாளராக இ.ரவீந்திரராசாவும் பொருளாளராக கு.நடராசாவும் மேலும் 18 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ-117)

## வலி.மேற்கில் முதியவர்களுக்கு அடையாள அட்டை

வலி.மேற்கு,மார்ச்13

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் முதியவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் இந்த அடையாள அட்டைகளை வழங்கி வருகின்றார்.

வலி.மேற்குப் பிரதேசத்திலுள்ள 25 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களே இந்த அடையாள அட்டையைப் பெறமுடியும் என்பதும் -

இந்த அடையாள அட்டையை வைத்திருக்கும் முதியவர்கள் போக்குவரத்து, வைத்தியசாலைகள், அரச அலுவலகங்கள், வங்கிகள் ஆகிய இடங்களில் முன்னுரிமை பெற்று தமது தேவைகளை நிறைவேற்ற முடியும் என்றும் - பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-175)

## விவசாய நிலங்களை பதிவுசெய்ய ஏற்பாடு

தென்மராட்சி,மார்ச்13

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள விவசாய நிலங்களை மீண்டும் இடாப்புகளில் பதிவுசெய்யும் நடைமுறையைக் கமநலசேவை நிலையம் மேற்கொள்ளவுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களின்போது பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களைச் சீர்ப்படுத்தி இடாப்புகள் தயாரிக்கப்படவுள்ளன.

பிரதேசத்தில் உள்ள அனைத்து நெற்செய்கை வயல்களையும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை நிலங்களையும் பதிவு செய்ய விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-117)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்12

'கடவுளின் சொந்தப் பிள்ளைகள்' விசேட பாடசாலையின் திறப்பு விழா நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அரியாலை ஆனந்தன் வடலி வீதி, 107ஆம் இலக்கத்தில் உள்ள பாடசாலைக் கட்டடத்திலேயே இந்தத் திறப்பு விழா நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ப)


இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டம் - 2005

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 08 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

1. நாவல்
2. சிறுகதை
3. நாடகம்
4. சிறுவர் இலக்கியம்
5. கவிதை
6. இலக்கிய ஆய்வும் விமர்சனமும்
7. உயர்கல்விக்கான நூல்கள்
8. பல்துறை

மேற்காட்டப்பட்ட துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கவும்.

*போட்டி விதிகள்:*
1. ஓர் எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்துகொள்ளலாம்.
2. பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3. நூல்கள் 2005 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
4. போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கும் நூல்களை அனுப்பும்போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
5. போட்டியாளர்களின் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர்,

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு, திருகோணமலை.
என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆர்.தியாகலிங்கம்.
செயலாளர்.

(சி/48293)(42-17-24)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

அன்னை மடியில்
04.06.1931

ஆண்டவன் அடியில்
11.02.2006

அமரர்
குமாரசாமி சண்முகலிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(13.03.2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எங்களின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"மங்கை இல்லம்" சந்தை வீதி, உடுப்பிட்டி. (48015) (52-11-45) - குடும்பத்தினர்.



ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து




13
03
2006

தாவடி வடக்கைச் சேர்ந்த, திரு.திருமதி பத்மலிங்கம்(கண்ணன்)-பிறேமா தம்பதியரின் இரட்டைச் செல்வங்கள் சங்கீதா,சரணியா தமது ஐந்தாவது பிறந்தநாளை இன்று (13.03.2006) திங்கட்கிழமை தாவடியிலுள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள்.

இவர்களை அப்பா, அம்மா, தங்கை சர்மி, அப்பம்மா, தாத்தா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், மாமா குடும்பம், சித்தப்பா குடும்பம், மாமாமார், சித்தி, அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆதிபராசக்தி அம்மன் அருளால் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



திரு.திருமதி பத்மலிங்கம்(கண்ணன்)
Swiss.

(48011)( 62-11-46)





லெப். கேணல் ஒஸ்கா (ஆதிமான்)பயிற்சி சிறப்பு துணைப்படையின் பயிற்சிப் பாசறை ஆரம்ப நிகழ்வில் புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் சுடர் ஏற்றுவதையும் பாசறையில் கலந்துகொண்ட பயிற்சியாளர்களையும் தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தளபதி மங்களேஸ் மற்றும் கடற்புலிப் போராளிகளையும் முறையே படங்களில் காணலாம்.

# கடற்புலிகளின் துணைப்படையின் போர்ப்பாசறை முல்லைத்தீவில்

முல்லைத்தீவு,மார்ச்.13

தமிழீழக் கடற்படையின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் ஒஸ்கார் (ஆதிமான்) பயிற்சி சிறப்பு துணைப்படையின் முதலாவது பயிற்சிப் பாசறை பயிற்சியாளர் க.பாஸ்கரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவுக் கடற்கரைப் பகுதியில் ஆரம்பமாகியது.

தொடக்க நிகழ்வாக தமிழீழத் தேசியக் கொடியைத் தமிழீழ கடற்படையின் துணைத் தளபதி செழியன் ஏற்றினார். தமிழீழ கடற்படையின் கொடியைக் கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றினார்.

தொடர்ந்து தமிழீழ கடற்படையின் கட்டளை அதிகாரி மாவீரர் லெப்.கேணல் ஒஸ்காரின் உருவப்படத்திற்கான ஈகச் சுடரை தமிழீழ கடற்படையின் தென் தமிழீழ பிராந்தியத் தளபதி சிறிராம் ஏற்றி வைத்ததோடு மலர்மாலையையும் அணிவித்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் சிறப்புரையாற்றினார். தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆசியுரை வழங்கினார். (ஐ)

# தூய தமிழில் பெயர்மாற்றுதல் ஒட்டுசுட்டான் பகுதியில் தீவிரம்

ஒட்டுசுட்டான்,மார்ச்13

ஒட்டுசுட்டான் வன்னியன் தொழிலக வாணிபப் ப்ணியாளர்களால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தூய தமிழில் பெயர் மாற்றும் செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகிறன்றன.

இந்த வகையில் பேராறு, மன்னாகண்டல், சின்னச்சாளம்பன், வசந்தபுரம், கெருடமடு ஆகிய பிரதேசங்களில் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் இடம்பெற்ற பெயர்மாற்றம் செய்யும் சேவையில் சுமார் 2ஆயிரம் பேர் வரையிலானவர்கள் தமது பெயர்களைத் தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றம் செய்துகொண்டனர்.

இந்தச் செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.பெயர் மாற்றம் செய்வதில் பொது மக்கள் பெரும் அர்வத்துடன் உள்ளனர். (எ-341-204)

# பொதுநோக்கு மண்டபத்திற்கு பழம்பாசிக் கிராமத்தில் அடிக்கல்

பரந்தன்,மார்ச்13

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரடிப்புலவு - பழம்பாசிக் கிராமத்தில் பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடனும் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடனும் இந்த மண்டபம் நிறுவப்படவுள்ளது.

இந்த மண்டபத்தை நிர்மாணிக்க ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் 9 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கரடிப்புலவு-பழம்பாசி கிராமத்தில் நடைபெறும் பொதுநிகழ்வுகளுக்குக் கிராம மக்களை ஒன்றுதிரட்டிக் கலந்துரையாடல் நடத்துவதற்கு இந்தப் பொதுநோக்கு மண்டபம் நிறுவப்படுவதாகக் கூறப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் வை. விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் பைந்தமிழின் தந்தை மார்க்கண்டு ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை பழம்பாசிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈழவன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டது.

அதனையடுத்து பொதுநோக்கு மண்டபத்திற்கான அடிக்கல்லை பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி, கரடிப்புலவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இரத்தினவடிவேல், பழம்பாசி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பாலசுப்பிரமணியம், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈழவன், சிக்கனக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதி உதயகுமார் ஆகியோர் நட்டுவைத்தனர்.

கருத்துரைகளை கரடிப்புலவு கிராம சேவையாளர் தயாபரன், பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி ஆற்றினார்.

(எ-352)

## வவுனியா நகரசபை வளாகத்தில் சகலவசதிகளுடன் கலாசார மண்டபம்

வவுனியா,மார்ச் 13

வவுனியாவில் சகல வசதிகளையும் கொண்ட கலாசார மண்டபம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'நிகொட்' நிதியுதவியுடன் வவுனியா நகர சபை வளாகத்தில் இந்த மண்டபம் நிர்மாணிக்கப்படும். 3.9 மில்லியன் ரூபா நிதியில் இந்த கட்டடம் கட்டப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் வவுனியா அரச அதிபர் கே.கணேஷினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கிணங்க தற்போது வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த கலாசார மண்டப அமைப்பு வேலைகள் அடுத்த ஆண்டு நிறைவுபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா குடியிருப்பு கல்யாண மண்டபத்தில் இராணுவத்தினர் தொடர்ந்து நிலைகொண்டு இருப்பதன் காரணமாக, வவுனியாவில் இதுவரை சரியான முறையில் கலை நிகழ்வு ஒன்றை நடத்த முடியாமல் இருந்ததாகக் கலை ஆர்வலர்கள் விசனம் தெரிவித்து வந்தநிலையில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-164)

## பண்டிவிரிச்சானில் வளநிலையம் திறப்பு

பரந்தன்,மார்ச் 13

மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் அனுசரணையுடன் பண்டிவிரிச்சான் கிழக்கில் 'கெயர்' திட்டத்திற்கான வளநிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வளநிலையம் திறந்து வைக்கப்பட்டதையடுத்து விவசாயிகள் தமக்குத் தேவையான விவசாயம் தொடர்பான கையேடுகள், விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள முடிகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

பெரிய பண்டிவிரிச்சான் கிழக்கு விவசாய அமைப்புத் தலைவர் யோசேப் பேணாட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கெய்ரின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி நிக்கொலஸ் கிறிஸ்தோப்பர், திட்டப்பணிப்பாளர் பிலிப்பா குஸ்லானட்ரெய்லா, மடுப் பிரதேச கிராம அலுவலர் செபமாலை அல்மேடா, மடுப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன், கெயர் மாவட்டக்குழுத் தலைவர் ரவிசங்கர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(எ-352-203)




# பூந்தோட்டம் நலன்புரி முகாமில் வசதியீனங்கள் பல எனப் புகார்

வவுனியா,மார்ச் 13

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் வசித்து வரும் மக்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த எட்டு ஆண்டுகளாக மேற்படி முகாமில் வசித்துவரும் தம்மை மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக வவுனியா மாவட்டச் செயலகம் தெரிவித்திருந்த போதிலும் இதுவரை காணி எதுவும் வழங்கப்படவில்லை என்றும்-

உரிய காலத்திற்கு நிவாரணம் வழங்கப்படுவது இல்லை என்றும்-

அந்த மக்கள் மேலும் தெரிவித்தனர்.

தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும்- அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

முகாமில் 8 ஆம் யுனிட் பகுதியைத் துப்புரவு செய்வதற்காக அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் சரியான முறையில் பணி செய்யாததன் காரணமாகக் குப்பைகள் தேங்கிக்கிடக்கின்றன. மலசல கூடங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படுவது இல்லை.

மின்சாரமும் ஒழுங்காக வழங்கப்படுவது இல்லை என்றும் - மேலும் புகார் தெரிவிக்கப்பட்டது. (எ-164)

## போதிய உபகரணங்கள் இன்மையால் பூநகரி மீனவரின் தொழில் பாதிப்பு

பரந்தன்,மார்ச்13

போதியளவு தொழில் உபகரணங்கள் இல்லாமையால் பூநகரிப் பிரதேச மீனவர்கள் தொழில் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது நவீன கருவிகளைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் நிலையில் தாம் சாதாரண உபகரணங்களைக் கூட பயன்படுத்தித் தொழில் செய்ய முடியவில்லை என்றும்- மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

தொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்ய லட்சக் கணக்கில் பணம் தேவைப்படுவதாகவும் -

வறிய நிலையில் வசிக்கும் தமக்கு போதிய நவீன கருவிகளைக் கொள்வனவு செய்ய முடிவதில்லை என்றும் -மீனவர்கள் தெரிவித்தனர்.

எனவே,தொண்டு நிறுவனங்கள் இந்த மீனவர்கள் விடயத்தில் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

(எ-202-352)




உலகக் கஜேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் பாலிநகர் கிராமத்தில் மின்னொட்டு மற்றும் மேசன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் மின்னொட்டுப் பயிற்சி மேற்கொள்வதைப் படங்களில் காணலாம். (எ)

# வெற்றி வாய்ப்பு யார் பக்கம்?



## தமிழக தேர்தல் களம்: கூட்டணிகளின் பலம் ஓர் அலசல்

தமிழக சட்டசபைக்கான பொதுத் தேர்தலை மே மாதம் சந்திக்கத் தமிழக மக்கள் தயாராகி வருகிறார்கள். அடுத்த ஆட்சி யாருக்குச் சொந்தம்? இந்த கேள்விக்குப் பதிலைத்தேடி பல்வேறு தரப்பினர் பலகோண ஆய்வுகளில் மூழ்கியுள்ளனர்.

தமிழக முதலமைச்சராக இருக்கும் ஜெயலலிதா மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற பகீரதப் பிரயத்தனம் செய்கிறார். கருணாநிதியோ, ஜெயலலிதாவை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றுவது என்ற ஓர் அம்சத் திட்டத்தின் கீழ் செயற்பட்டு வருகிறார். அதனால்தான் பல்வேறு கட்டங்களில் இறங்கி வந்து கூட்டணியைப் பேணி வருகிறார்.

நடப்பு தேர்தல் களத்தில் நிற்கும் அணிகளின் பலத்தைக் கணிப்பதாக இருந தால், ஒவ்வொரு அணியிலும் உள்ள கட்சிகளின் கடந்த தேர்தல்களின் மூலமாக பலத்தையும் அலச வேண்டியது அவசியமாகும். எனவே, களம் காணப் போகும் ஒவ்வொரு கட்சியும் கொண்டுள்ள மக்கள் செல்வாக்கை முதலில் அறிவோம்.

கடந்த 96ஆம் ஆண்டு தமிழக சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் நான்கு அணிகள் தனத்தனியே நின்று களம் கண்டன. அப்போது ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளின் சதவீதம் இதோ:-



★முதல் அணி
- தி.மு.க. 42.07
- த.மா.கா. 9.30

★2ஆவது அணி
- அ.தி.மு.க 21.47
- காங்கிரஸ் 5.61
- இந்திய கம்யூ. 2.12

★3ஆவது அணி
- ம.தி.மு.க. 5.78
- மார்க்சிஸ்ட் 1.68
- ஜனதா தளம் 0.43

★4ஆவது அணி
- பா.ம.க. 3.84
- திவாரி காங். 0.77

1998ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு மட்டும் தனியே தேர்தல் நடந்தது. அப்போது ஐந்து அணிகள் களம் கண்டன. அவற்றின் வாக்குகளின் விவரம் இதோ:-



★முதல் அணி
- அ.தி.மு.க 25.89
- பா.ஜ.க. 6.86
- பா.ம.க. 6.05

★2ஆவது அணி
- தி.மு.க. 20.68
- த.மா.கா. 20.19
- இந்திய கம்யூ 2.45

★3ஆவது அணி
- காங்கிரஸ் 4.78
- எம்.ஜி.ஆர் அ.தி.மு.க. 1.09

★4ஆவது அணி
- மார்க்சிஸ்ட் 1.68

★5ஆவது அணி
- புதிய தமிழகம் 1.74

இந்த நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் அமைந்த ஆட்சி ஓர் ஆண்டுக்கு மேல் நீடிக்கவில்லை. 1999ஆம் ஆண்டு மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலை இந்திய மக்கள் சந்திக்க நேர்ந்தது. அப்போது மும்முனைப் போட்டியில் தேர்தல் களமே திணறியது. அப்போது கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகள் சதவீதம் வருமாறு:-



★முதல் அணி
- தி.மு.க. 23.14
- பா.ஜ.க. 7.14
- ம.தி.மு.க. 5.98
- பா.ம.க. 8.21
- தமிழக ராஜீவ் காங். 1.24

★2ஆவது அணி
- அ.தி.மு.க. 25.68
- காங். 11.10
- இந்திய கம்யூ. [illegible].56
- மார்க்சிஸ்ட் 0.63

★3ஆவது அணி
- த.மா.கா. 7.15
- புதிய தமிழகம் 2.09

இந்தத் தேர்தல் நடந்து முடிந்த இரு ஆண்டுகளுக்குள் தமிழக மக்கள் சட்டசபைத் தேர்தலை சந்திக்க வேண்டியதாயிற்று. அதன்படி 2001ஆம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தல் வந்தது. கட்சிகள் பெற்ற வாக்குகள் சதவீதம் தொடருகிறது.



★முதல் அணி
- தி.மு.க. 30.92
- பா.ஜ.க. 3.19
- புதிய தமிழகம் 1.27

★2ஆவது அணி
- அ.தி.மு.க. 31.44
- பா.ம.க. 5.50
- த.மா.கா. 6.73
- காங். 2.48
- பார்வர்டு பிளாக் 0.14
- சி.பி.எம். 1.68
- சி.பி.ஐ. 1.59

★3ஆவது அணி
- ம.தி.மு.க. 4.65

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய மக்கள் வாக்களித்தனர். அதில் தமிழகம் தழுவிய கட்சி வாரியான வாக்குகள் சதவீதம் இதோ:-



- தி.மு.க. 23.08
- அ.தி.மு.க. 29.77
- காங். 14.40
- சி.பி.ஐ. 2.97
- சி.பி.எம். 2.87
- ஜனதாதளம் 0.52
- பா.ஜ.க. 5.07
- பா.ம.க. 6.71
- ம.தி.மு.க. 5.85
- முஸ்லிம் லீக் 1.52

இதில் முஸ்லீம் லீக் வேட்பாளர் காதர் மொய்தீன் வேலூரில் போட்டியிட்டு வென்றார். அவர் தி.மு.கவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றதால அவரின் வாக்குகள் தேர்தல் ஆணையத்தின் நிலைவரப்படி தி.மு.கவின் வாக்குகளாகவே கருதப்படும். ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்கு சதவீத நிலைவரத்தை புரிந்து கொண்டோம். இனி இந்தப் புள்ளி விவரங்கள் அணிக்கு வழங்கும் பலத்தைப் பற்றிப் பார்ப்போம்.

தமிழகத்தில் நடந்த ஐந்து பொதுத் தேர்தல்களில் கட்சிகள் அடுத்தடுத்து பெற்றுவந்த புள்ளி விவரங்களைப் புரிந்து கொண்டோம். இனி இந்தப் புள்ளி விவரங்கள் நமக்கு உணர்த்தக்கூடிய உண்மைகள் என்ன என்பதைக் கணக்கிட்டு பார்த்தால் கணக்கியல் கருத்தை எட்ட முடியும்.

ஆளுங்கட்சியாக இருக்கும் அ.தி.மு.க., வருகிற சட்டசபை பொதுத் தேர்தலில் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளுமா? பறிகொடுத்துப் பரிதவிக்குமா?

96ஆம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேரதலை சந்தித்த அ.தி.மு.க. 21.47 சதவீத வாக்களைப் பெற்றிருந்தது. அடுத்த இரணடு ஆண்டுகளிலேயே 98ஆம் ஆணடு நாடாளுமன்றத் தேர்தலை சந்தித்த அக் கட்சி பெற்ற வாக்குகள் 25.89 சதவீதம். இரண்டே ஆண்டுகளில் அ.தி.மு. கவின் வாக்கு 4.42 சதவீதம் கூடியிருப்பதை இந்தப் புள்ளிவிவரம் புலப்படுத்துகிறது.

மீண்டும் 99ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது அ.தி.மு. கவுக்கு 25.68 சதவீத வாக்குகள் கிடைத்தன. அ.தி.மு.கவுக்கு 0.21 சதவீத வாக்குகள் குறைந்திருப்பதை இங்கே கவனிக்க வேண்டும்.

2001 ஆம் ஆண்டிலோ சட்டசபைத் தேர்தலை சந்தித்த அ.தி.மு.க. 31.44 சதவீத வாககுகள் பெற்றது. 99ஆம் ஆண்டு நடநத தேர்தலில் பெற்ற வாக்குகளை விட 2001ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் 5.76 சதவீதம் கூடுதலான வாக்குகளை அ.தி. மு.க. பெற்றிருப்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த திடீர் வளர்ச்சிக்குக் காரணம் கட்சியின் சுயபலம் அல்ல. 2001ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி. மு.க. அமைத்திருந்த மெகா கூட்டணி தான்.

2004ஆம் ஆண்டு அ.தி.மு.கவுக்கு 29.77 சதவீத வாக்குகள் விழுந்திருக்கின்றன. 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. பெற்றிருந்த வாக்குகளில் 1.67 சதவீத வாக்குகள் சரிந்து விட்டதை இந்தக் கணக்கு காட்டிக் கொடுக்கிறது. அந்த தேர்தலில் அ.தி.மு. கவிற்கு ஓர் இடத்தில்கூட 29.77 சதவீத வாக்குகள் கிடைத்திருக்கின்றன. இதன் மூலம் அக்கட்சிக்கு அசைக்க முடியாத வாக்கு வங்கி உள்ளது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இனி தி.மு.கவின் வாக்குப் பலத்தை புள்ளி விவரக் கணக்கின் மூலம் அலசிப் பார்ப்போம்.

96ஆம் ஆண்டு தமிழக சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் களம் கண்ட தி.மு.க. 42.07 சதவீத வாக்குகளை வென்றிருந்தது. ஆனால் அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே நாடாளுமன்ற பொதுத் தேர்தலை 98ஆம் ஆண்டில் சந்தித்த தி.மு.கவிடமிருந்து ஏறத்தாழ சரிபாதி வாக்குகள் பறிபோயின. இதன் மூலமாக தி.மு.கவின் வாக்கு வங்கி சிதறிப் போனது என்று கருத முடியாது. ஏனெனில், அ.தி.மு.க. என்ற அசுரபல கட்சியை வீழ்த்த த.மா.கா கட்சிக்கு அதிக இடங்களை ஒதுக்கித் தரவேண்டிய நிர்பந்தம் தி.மு.கவுக்கு ஏற்பட்டது என்பதே உண்மையாகும்.

99ஆம் ஆண்டில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலை தமிழகம் காணவேண்டியதாயிற்று. அப்போது தி.மு.கவுக்கு 23.13 சதவீத வாக்குகள் கிடைத்தன. ஒரே ஆண்டில் 2.45 சதவீத வாக்குகள் கூடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

2001ஆம் ஆண்டு தி.மு.கவுக்கு வாக்களித்த மக்கள் 30.92 சதவீதம், இரண்டே ஆண்டுகளில் தி.மு.கவின் வாக்குவங்கியில் 7.75 சதவீத வாக்குகள் பெருகியிருப்பதை வியந்து நோக்கலாம். ஆனாலும் அந்த சட்டசபைத் தேர்தலில் தி.மு. கவால் வெற்றிபெற முடியவில்லை. ஆனால், புள்ளிவிவரம் உணர்த்தும் ஒரு வியப்புக்குறியை- விவாதத்திற்கே கூட எடுத்துக் கொள்ளலாம். தி.மு.க. பெற்ற வாக்குகளைவிட 0.52 சதவீத வாக்குகளை மட்டுமே கூடதலாகப் பெற்றிருந்த அ.தி. மு.க., தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சியையே கைப்பற்றிவிட்டது. அ.தி. மு.கவின் மெகா கூட்டணியின் முன் தி.மு. கவின் மைக்ரோ கூட்டணியின் வெற்றி நொறுங்கிப் போனது.

பல இடங்களில் சில ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் தி.மு.கவின் வெற்றி வாய்ப்பு பறிபோயிற்று. இந்த தோல்விக்கு காரணம் அந்த தேர்தலில் ம.தி.மு.க. தனித்துப் போட்டியிட்டு வாக்குகளைப் பிரித்ததுதான் என்பது வரலாறு உணர்த்தும் வசீகர உண்மை. இதனால்தான் நடப்புத் தேர்தலில் ம.தி.மு.கவின் மீதான ஈர்ப்பு தமிழகத்தில் தலைதூக்கிவிட்டது. அந்தத் தேர்தலில் ம.தி.மு.க. தனித்துப் போட்டியிட்டுப் பெற்றிருந்த வாக்குகள் 4.65 சதவீதம். அந்தத் தேர்தலில் ம.தி. மு.க. தனித்துப் போகாமல் தி.மு.கவிலேயே நிலைத்திருந்தால் அந்த 4.65 சதவீத வாக்குகள் தி.மு.க. அணிக்கே கிடைத்திருக்கும். அரை சதவீத வாக்கு வித்தியாசத்தில் வென்ற அ.தி.மு.கவை விரட்ட ம.தி.முகவின் வாக்குகள் தி.மு. கவுக்கு மாமருந்தாக கிடைத்திருக்கும். தனிநபர்களின் ஈகோ, சுயபலத்தின் மீதான அதீத நம்பிக்கை, கணக்கீடுகளில் [illegible]லுத்திய கவனத்தின் பிசகல் போன்ற பல்வேறு அம்சங்கள் காரணமாக தி.மு.க. அணியிலிருந்து பிரிந்து போகும் சூழ்நிலை ம.தி.மு. கவிற்கு ஏற்பட்டது. அந்தத் தேர்தலின் போது யதார்த்த உண்மையைப் புரிந்துகொண்ட முரசொலி மாறன், எக்காரணத்தை கொண்டும் ம.தி. மு.கவை விட்டு விடாதீர்கள் என்று கருணாநிதியிடம் மன்றாடிப் பார்த்தார். ஆனாலும் அவரின் வேண்டுகோள் ஏற்கப்பட வில்லை. இதனால்தான் தி.மு.க. தனது ஆட்சியையே பறிகொடுக்க வேண்டியதாயிற்று.

2004ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது கருணாநிதியின் அணுகுமுறை, சாணக்கியர் என்ற அடையாளத்தைக் காட்டியது. 2001 ஆம் ஆண்டு உணர்ச்சி வசப்பட்டு ஆட்சியை பறிகொடுத்த நிலை, நடப்பு சட்டசபைத் தேர்தலின்போது நிகழவே கூடாது என்பதில் கருணாநிதி மிகுந்த முனைப்போடு செயற்பட்டு வருகிறார். ஈகோ இல்லை. தியாகம் செய்யத் தயார் என்று அறிவிக்கிறார். சிறிய கட்சிகளுக்குக்கூட முக்கியத்துவம் தந்து இறங்கிவந்து பேசுகிறார். தோழமைக் கட்சித் தலைவர்களிடம் பேச கடந்த சட்டசபை பொதுத் தேர்தலின் போது ஓர் குழு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் உறுப்பினர்க்ள் தங்கள் உணர்வுகளுக்கும், உபயோகங்களுக்கும் ஏற்றவாறு தோழமைக் கட்சித் தலைவர்கள் சிலரை சீண்டிப் பேசியதால்தான் கூட்டணி நிலை குலைந்தது என்ற உண்மையை கருணாநிதி நன்றாக உணர்ந்திருக்கிறார். அதனால்தான் அவர் தோழமைக் கட்சித் தலைவர்களை நேரடியாக அழைத்துப் பேசி வருகிறார். இருந்த போதும் மற்றைய கட்சிகளுடன் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்தாலும், ம.தி. மு.கவுடன் சற்று இறுக்கமாக தி.மு.க. நடந்து கொண்டதால், கூட்டணியிலிருந்து ம.தி.மு.க. விலகிவிட்டது.

கடந்த 2004ஆம் ஆண்டு மெகா கூட்டணியை அமைத்த கருணாநிதி முடிவு செய்ததே அவரின் முன்னெச்சரிக்கை முயற்சியாகும். இதனால் அந்த தேர்தலில் தி.மு.கவுக்கு 23.08 சதவீத வாக்குகள் கிடைத்தன. 2001ஆம் ஆண்டு தி.மு. கவிற்கு 30.92 சதவீத வாக்குகள் கிடைத்தன. ஆனால் 2004இல் 23.08 சதவீத வாக்குள் தான் கிடைத்துள்ளன. இந்த வாக்கு வங்கிச் சரிவை கட்சியின் செல்வாக்குச் சரிவு என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில், இந்த தேர்தலில் தி.மு.க. ஒரு மெகா கூட்டணியை அமைத்திருந்தது. இதரக் கட்சிகள் கணிசமான வாக்குகளை பெற்றிருந்தன. அனைத்தையும் ஒருங்கிணைக்கும் போது ஓர் இமாலய வெற்றி தானாக வந்துவிட்டது. 100 சதவீத வெற்றியே முற்றிலும் பெற்றுவிட்ட சாதனை தி.மு.க. அணியைச் சேர்ந்து விட்டது.

எனவே, 2004ஆம் ஆண்டு அணியை தக்கவைத்துக் கொள்வது தி.மு.கவின் வெற்றிக்கு உத்தரவாதம் தரக்கூடும். இதனை உணர்ந்துதான் ஜெயலலிதா தரப்பினர் பல்வேறு வியூகங்கள் அமைத்து வருகின்றனர். தி.மு.க. கூட்டணியை உடைப்பது, அதிலிருந்த சில கட்சிகளை இழுப்பது, மூன்றாவது அணியை உருவாக்கி வலுவாகப் போட்டியிடச் செய்வது, அதன் மூலமாக அ.தி.மு.க. அரசுக்கு எதிரான வாக்குகளில் ஒரு பகுதி தி.மு.க. அணிக்குப் போகாமல் தடுப்பது போன்ற பல்வேறு அணுகுமுறைகள் அரங்கேற்றத் திற்கு முயன்றன. ஆனால், ஒவ்வொரு முயற்சியும் வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாகி வருகிறது. *(வளரும்)*

*நன்றி: சங்கதி*

# அரசில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இணைகிறதா? அடியோடு மறுக்கிறார் அதன் செயலாளர்நாயகம்

கொழும்பு,மார்ச் 13

''இலங்கையில் நிலையான சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்குவதை விரும்பாத சிலரே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணையப் போவதாகவும் அதன் தலைவர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போகிறார்கள் எனவும் கூறி வருகின்றனர்.

''அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெறும் திட்டம் முஸ்லிம் காங்கிரஸிடம் இல்லை. அவ்வாறு இணையப் போவதாக வரும் செய்திகளை நாம் அடியோடு மறுக்கிறோம்''

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் எம்.ரி. ஹசன்அலி 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணையப் போவதாகவும் அமைச்சுப் பதவிகளைப் பெறப்போவதாகவும் ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அவர் முன்பு வகித்த துறைமுக அமைச்சுப் பதவியும், கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்துக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளன என்றும் -

உள்ளூராட்சி சபைத்தேர்தல் முடிந்ததும் இவர்கள் இருவரும் பதவிகளை ஏற்பர் எனவும் - செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுதொடர்பாக ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினரும் அண்மையில் அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினர் எனவும், அப்போதே மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான இணக்கம் காணப்பட்டது எனவும் - அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இந்தச் செய்திகளை மறுத்துரைத்த ஹசன் அலி மேலும் கூறியதாவது-

அமைச்சுப் பதவிகளைப் பெறப்போவதாகச் சில நாள்களாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

(14ம் பக்கம் பார்க்க)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

சகல வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை (14.03.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு புதிய உயர்கல்லூரியில் (ஆரியகுளம்) இடம் பெறவுள்ளது. புதிய வேலைவாய்ப்பு தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப் பட உள்ளதாலும் பதிவுகளை உறுதிப்படுத்தவும் அனைத்துப் பட்டதாரிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(48022)
(54-34-49)

**வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.**

## நன்றி நவிலல்

'நன்றி மறப்பது நன்றன்று'
எனும் வாக்கிற்கு இணங்க
ஊரெழு மேற்கு, சுன்னாகம் மீனாட்சி அம்பாள் தேவஸ்தான
பிரதம குருவும் தர்மகர்த்தாவுமாகிய
**சிவப்பிரம்ம ஸ்ரீ**
**மு.கிருஷ்ணசாமிக்குருக்கள்** தம்பதியரின்
**பவளவிழாவினையும்**
**பிரம்ம ஸ்ரீ கிருஷ்ண பங்குசக் குருக்களின்** புத்திரன்
**சிரஞ்சீவி ரிஷிகேச சர்மா** அவர்களின்
**உபநயன விழாவினையும்**

10.03.2006 அன்று மிகவும் சிறப்பாக தமிழ்நாடு பிள்ளையார் பட்டி, கற்பக விநாயகர் வேதாகம பாடசாலை அதிபர் டாக்டர் **சிவஸ்ரீ பிச்சையப்பா சிவாச்சாரியாரின்** தலைமையின் கீழ் நடத்தித்தந்த சிவஸ்ரீ T.V.**ஞானசம்பந்த சிவாச்சாரியார்** மற்றும் சிவஸ்ரீ K.S.**தியாகராஜ சிவாச்சாரியார்** அவர்களுக்கும் மேலும் ஆசிநல்கிய வித்யாகரு காயத்ரி பீட அதிபர் சிவஸ்ரீ த.மகாதேவக் குருக்கள் மற்றும் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ **நா. சர்வேஸ்வரகுருக்கள்** ஆகியோருக்கும், இவ்விழாவின் அழைப்பை ஏற்று வருகைதந்த அனைத்துச் சிவாச்சாரிய பெருமக்களுக்கும் மேலும் சிரேஷ்ட அந்தணர்களுக்கும் நூல் வடிவமைப்பிற்கு உதவிய கோப்பாய் சிவம் அவர்களுக்கும் அச்சில்பதித்த சிவரஞ்சனம் அச்சகத்தினருக்கும் மேலும் மங்கள வாத்திய இசை வழங்கியோருக்கும் அலங்கார வடிவமைப்பு ஒலி, ஒளி வடிவமைப்பிற்கு உதவியோருக்கும் மேலும் இவ்விழா மிகவும் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்தோருக்கும் எமது அழைப்பை ஏற்று இவ்விழாவிற்கு வருகைதந்த அனைவருக்கும் மேலும், ஊரெழு வாழ் மக்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊரெழு மேற்கு, சுன்னாகம்.** **குடும்பத்தினர்.**
(மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம்) (48035) (54-34-49)

## துயர் பகிர்கின்றோம்



*கோண்டாவில் தில்லையம்பதியைச் சேர்ந்த*
**மா.குமாரசிங்கம் (ராமண்ணா)**
*அவர்களின் அன்புத் தாய்*
**மார்க்கண்டு திரேசம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(48033)
(54-34-49)

**சுகன் குடும்பத்தினர், சுகன் போட்டோ, தில்லையம்பதி, கோண்டாவில்.**

## கண்ணீர் அஞ்சலி



*கோண்டாவில்*
*தில்லையம்பதியைச் சேர்ந்த*
**மா. குமாரசிங்கம்**
*அவர்களின் அன்புத் தாய்*
**மார்க்கண்டு திரேசம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(48026)
(54-34-49)

**முத்தொளி வீடியோ**
**உரிமையாளரும் ஊழியர்களும்,**
**கோண்டாவில் தில்லையம்பதி.**

## அறிவோர் ஒன்றுகூடல்

கிளிநொச்சி,மார்ச் 13

தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் மன்னார் மாவட்டப் பிரிவின் ஏற்பாட்டில் 'தேடல்' அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அடம்பனில் இடம்பெறவுள்ளது.

'குழந்தைக் கல்வியியலில் கலை' என்ற தலைப்பில் முல்லை கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) எஸ். அருணாசலம் சிறப்புரையாற்றுவார்.

(3-352)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா கதிராசிப்பிள்ளை

புலோலி தெற்கு,காந்தியூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா கதிராசிப்பிள்ளை அவர்கள் 11.03.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை இராசையாவின் அன்பு மனைவியும் செல்வராசா(தாதிய உத்தியோகத்தர், அக்கராயன் அரசினர் வைத்தியசாலை), சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் சண்முகராசா,இராசமணி ஆகியோரின் அன்பு மாமியும் அகிலன், அனுதர்சன், அனுசாந்தன், உதயரூபன், ராமேஸ்வரன், கவிதா, அனுஷா (களுதாவளை மகா வித்தியாலயம்), கீர்த்திகா, கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அங்கணனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கருகம்பன் மயானத்தில் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*காந்தியூர், புலோலி தெற்கு.* (சி-48312) (54-34-49)
**தகவல்: செல்வராசா (மகன்).**


**நாகம்ஸ் சுன்னாகம்**
*விஜய், அஷின்*
*நடித்த*
**சிவகாசி**
பு.நே. 11.00, 3.00, 7.00

**ராஜா யாழ்ப்பாணம்**
3ஆவது வாரம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
மகாநடிகன் சத்தியராஜ், சிபிராஜ், நமீதா, வடிவேல் நடித்த
**கோவை பிரதர்ஸ்**
காட்சிநேரம் மாற்றப்பட்டுள்ளது.
பு.நே. 10.30, 2.00, 5.00 மட்டும்

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
அக்ஷன்கிங் அர்ஜுன் , கஜாலா , விவேக்
நடித்த
**மதராஸி**
பு.நே.: 10.00, 1.30, 4.30


## மரண அறிவித்தல்கள்

### மைலுப்பிள்ளை விஸ்வலிங்கம்



(ஓய்வு பெற்ற புகையிரதச் சாரதி)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புது வீட்டு ஒழுங்கை, காங்கேசன்துறையை வதிவிடமாகவும் தற்போது துன்னாலை மத்தி, கரவெட்டியில் வசித்தவருமான மைலுப்பிள்ளை விஸ்வலிங்கம் அவர்கள் 11.03.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மைலுப்பிள்ளை-அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வரத்தினம்மாவின் அன்புக் கணவரும் பாலேந்திரதாசன், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் மகேந்திரதாசன், ரவீந்திரதாசன், செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சைலஜா, ரஞ்சினி, சாந்தினி, ராகினி ஆகியோரின் மாமனும் சஜீவன், மவிஸ்ரா, கீர்த்தினா, விர்த்தினா, அரன்ஜா, அபிலாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் வேரொண்டை மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துன்னாலை மத்தி, கரவெட்டி.* (48030) (54-49-34)
**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி கந்தையா பாக்கியம்



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பாக்கியம் அவர்கள் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா-தங்கம்மா தம்பதியரின் மருமகளும் பொன்னையா கந்தையாவின் (இளைப்பாறிய கிளை முகாமையாளர், நீர்வேலி ப.நோ.கூ.ச.)அன்பு மனைவியும் கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய நுகர்ச்சி முகாமையாளர், அச்சுவேலி ப.நோ. கூ. ச.), இளையபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் புனிதவதி (ஜேர்மனி), அனுசலாதேவி (ஜேர்மனி) கௌசலாதேவி (சுவிஸ்), சித்திரா (ஜேர்மனி) கோமதி ஆகியோரின் அன்புத் தாயும் சோமசேகரம் (ஜேர்மனி), மகேந்திரராஜா (ஜேர்மனி), பாலசிங்கம் (சுவிஸ்), தவராசா (ஜேர்மனி), ரமணிதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம், (மா) யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயராம், ராதிகா, சசீந்திரன், சிந்து, நிசாந், சௌமிலா, நிதர்சன், தனுகா, கவிதா, லக்ஷிகா, மிதுனாளினி, ஹரிலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.*
*T.P.:0776660285* (48028) (54-34-49)
**தகவல்: குடும்பத்தினர்.**

### அந்தோனிப்பிள்ளை பீற்றர்



மாதகலைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பீற்றர் அவர்கள் (11.03.2006) சனிக்கிழமை குருநகரில் காலமானார்.

அன்னார் புஸ்பாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப் பிள்ளை-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற சூசைப்பிள்ளை சவிரிமுத்து-மேரியோசேப்பின் (மணி) தம்பதியரின் மருமகனும் டிலோஷன், றதீசன், திலக்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2006) திங்கட்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 4, 3ஆம் ஒழுங்கை, அடப்பன் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துவரப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.4, 3ஆம் ஒழுங்கை, அடப்பன் வீதி, குருநகர்.* (48029) (54-34-49)
**தகவல்: மனைவி, பிள்ளைகள்.**

### திருமதி காசித்தம்பி தெய்வானைப்பிள்ளை

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் பெரிய அரசடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசித்தம்பி தெய்வானைப்பிள்ளை அவர்கள் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசித்தம்பியின் அன்பு மனைவியும் கணபதிப்பிள்ளை(ஓய்வுபெற்ற தபால் சேவகர்), மகேஸ்வரி, சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்,பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்), சிவராசா (ஓமான்), கந்தசாமி (அதிபர், யா / இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் ஆறுமுகசாமி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்), ஞானேஸ்வரி, மனோன்மணி, ஞானகலை, அரியமலர் ஆகியோரின் பாசமிகு மாமியும் வள்ளிப்பிள்ளையின் சகோதரியும் தில்லைநாயகி, கருணலதா, தவரூபன், கலையரசி, கலாவதனி ,கலாவேணி, சிவகுமார், சிவராணி, சிவநாதன், சிவதாசன், சிவரஞ்சினி,சிவரஞ்சன்,ரவிசங்கர் ,ரவிவர்மன், தர்சிகா, சிவரூபன், சிவஜீவா, சிவரூபி, அரவிந்தன், அரிசோபா, அனுசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.03.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரிய அரசடி, சாவகச்சேரி.* (48024) (54-34-49)
**தகவல்: பிள்ளைகள்**

## வரலாறு படைத்தன இரு அணிகளும்

# ஆஸி. படைத்த சாதனையை முறியடித்தது தென் ஆபிரிக்கா

ஜொகன்னஸ்பர்க்,மார்ச் 13


கிரிக்கெட் வரலாற்றில் ஒரு மறக்க முடியாத சாதனை நாள். தென் ஆபிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி, 434 ரன் குவித்து புதிய உலக சாதனை நிகழ்த்தியது. இதையும் போராடி தென் ஆபிரிக்க அணி அதிசயம் நிகழ்த்தியது. 438 ரன் எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றிபெற்றது.

இதன் மூலம் ஆஸ்திரேலியாவின் உலக சாதனை வெறும் 3 மணி நேரத்தில் முறியடிக்கப்பட்டு விட்டது. உலக சாதனையுடன் தொடரையும் வென்று அமர்க்களப்படுத்தியது தென் ஆபிரிக்கா.

துவக்கம் முதலே அதிரடியைக் காட்டிய கில்கிறிஸ்ட் 44 பந்தில் 55 ரன் எடுத்து ஆட்டமிழந்தார். அட்டகாசமாக ஆடிய கேடிச் 79 ரன் குவித்தார். தென் ஆபிரிக்க வீரர்களை தனது அதிரடியால் நிலைகுலைய வைத்த பொண்டிங்கும் அசுரத்தனமாக ரன் குவிக்க ஜெட் வேகத்தில் ஸ்கோர் எகிறியது. இவருக்குப் போட்டியாக மறுமுனையில் ஹீசேவும் பட்டயக் கிளப்பினார். இந்த ஜோடியின் பிரமாதமான ஆட்டத்தால் அணியின் ஸ்கோர் 350 ரன்களைக் கடந்தது. ஹீசே 51 பந்தில் 81 ரன் குவித்து ஆட்டமிழந்தார்.

புதிய சாதனை: சதம் அடித்த பொண்டிங் தனது விளாசலைத் தொடர, ஆஸ்திரேலிய அணி, இலங்கையின் 398 ரன் ஸ்கோரை முறியடித்து உலக சாதனை நிகழ்த்தியது. தவிர 400 ரன்களைக் கடக்கும் முதல் அணி என்ற புதிய சாதனையையும் படைத்தது.

50 ஓவரில் ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 434 ரன்கள் என்ற இமாலய ஸ்கோரை எட்டி சாதித்தது.



175 ஓட்டங்களை விளாசிய கிப்ஸ்

ஒருநாள் போட்டியில் இது ஒரு புதிய வரலாறு. இந்த எட்ட முடியாத சாதனை இலக்கை நோக்கி களமிறங்கிய தென் ஆபிரிக்க அணியும் சாதனை நிகழ்த்தியது. தென் ஆபிரிக்கா 49.5 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 438 ரன் எடுத்து வெற்றி பெற்றது. தென். ஆபிரிக்க வீரர் கோர்சல் கிப்ஸ் 111 பந்துகளைச் சந்தித்து 175 ஓட்டங்களைப் பெற்றார். கிறெம் சிமித் 90 ஓட்டங்களை விளாசினார். இந்த வெற்றியின் மூலம் ஆஸ்திரேலியாவின் உலக சாதனையை வெறும் மூன்றே மணி நேரத்தில் முறிடியத்து புதிய உலக சாதனை நிகழ்த்தியது தென் ஆபிரிக்கா. தவிர, 3-2 என்ற முன்னிலையில் தொடரையும் வென்று கோப்பையை கைப்பற்றியது. (3)

## அரசுக்கு ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை அடுத்த சுற்றுப்பேச்சின் போது திட்டவட்டமாக அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்ற காலக்கெடுவை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் விதிப்பது என அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை அன்றைய தினம் அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின்போது காலக்கெடு பற்றிய விடயத்தை ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும், பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகத் தெரிவித்தனர் என்றும் அறியவந்தது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை தற்போதைய வடிவத்தில் ஏற்கமுடியாது என அறிவிப்பதையும், அனுசரணைத் தரப்பிலிருந்து நோர்வேயை நீக்குவதையும் செயல்படுத்துவதற்கு அடுத்த சுற்றுப்பேச்சு வரை கால அவகாசத்தை ஜே.வி.பி. வழங்குகின்றது என்றும்- அடுத்த சுற்றுப்பேச்சுக்கு முன்னர் (அதாவது ஏப்ரல் 19ஆம் திகதிக்கு முன்பு) இதனைச் செயற்படுத்த அரசுத்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் அரசுக்கு வழங்கும் ஆதரவை ஜே.வி.பி. விலக்கி விடும் என்றும் -

அவர்கள் எச்சரித்தனர் எனக் கூறப்படுகின்றது. இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சர்வதேச அழுத்தம் முழு அளவிலுள்ள தற்போதைய சூழ்நிலையில் அனுசரணைப் பொறுப்பிலிருந்து நோர் வேயை அகற்றுவது என்பது சிந்தித்துக்கூடப் பார்க்க முடியாத விடயம் எனக் கருதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதனால் ஜே.வி.பியின் காலக்கெடு அறிவிப்பை கணக்கில் எடுக்காது நிராகரித்து விட்டார் என்றும் தெரிகின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது தெற்கில் முக்கியமான சபைகளை கைப்பற்றமுடியும் என்ற நம்பிக்கையில் இருக்கும் ஜே.வி.பி, அதைச் சாதித்த பின்னர், அந்த அரசியல் பலத்தோடு இவ்விடயங்களைக் கையாண்டு ஜனாதிபதியை தமது நிலைப்பாட்டுக்கு இறங்கிவரச் செய்யலாம் என்ற நம்பிக்கையில் இருப்பதாகவும் விடயமறிந்த அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (க-3)

## அரசில் முஸ்லிம்...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

அச்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் பொய்யானவை.

நாம் ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினோம் என்றும், அச்சந்திப்பின்போது இது விடயம் குறித்துத் தீர்மானிக்கப்பட்டதுஎன்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. நாம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினோம் என்பது உண்மை. ஜனாதிபதி சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் இந்நிலையில் ஒரு பொறுப்புவாய்ந்த அரசியல் கட்சி என்ற வகையில் அவரது சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவது எமது கடமை.

அது மாத்திரமின்றி சமாதான முன்னெடுப்பில் நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம்களின் நலன்கள் பற்றியும் ஜனாதிபதியுடன் பேச வேண்டிய அவசியம் எமக்கிருக்கின்றது. இவைபற்றிப் பேசவே நாம் ஜனாதிபதியைச் சந்தித்தோம்.

அச்சந்திப்புக்கு அர்த்தம், நாம் அரசுடன் இணையப்போகிறோம் என்பதல்ல. நாம் அரசின் சமாதான முயற்சிகளுக்கு வழங்கும் ஆதரவை விரும்பாத சிலரே இவ்வாறு பொய்யாகக் கதைகட்டி விட்டுள்ளனர். இதில் எதுவித உண்மையுமில்லை.

அரசின் சமாதான முயற்சிகளுக்கு மாத்திரமல்ல, அரசு முன்னெடுக்கும் எல்லாவிதமான நல்ல நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு வழங்குவோம். ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற வகையில் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவது எமது கடமையாகும். இதை யாரும் மிகையான கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடாது - என்றார் அவர்.

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனையோர் அடையாள அட்டை பெற விண்ணப்பித்த பின்னர் தொழில் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் - படை அதிகாரிகள் கூட்டத்தில் அறிவித்தனர். இதுவரை நடைமுறையில் இருந்த பாஸ் நடைமுறை நீக்கப்பட்டு, படையினர் அடை யாள அட்டை வழங்கும் நடைமுறை அமு லுக்கு வந்துள்ளது.

இந்த அடையாள அட்டை வழங்கவசதி யாக சுமார் 50 மீனவர்களின் படங்கள் படை யினரால் எடுக்கப்பட்டுள்ளன. அவை அடையாள அட்டை தயாரிப்பதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. (3)

## கடற்படையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்சவத்தில் கலந்துகொண்ட அமைச்சர் பின்னர் புனித அந்தோனியார் ஆலயத்தில் மேற்கொள்ளவேண்டிய புனரமைப்புப் பணிகள் குறித்து ஆலய நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார். கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் தைப் புனரமைப்பது மற்றும் அதன் அபிவிருத்தி தொடர்பாக நிதி ஒதுக்கீட்டைப் பெறுவதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்ததும் -

அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ-111-3)

## பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து அவ ரது பதவியேற்பு தாமதமாவதால், பதில் துணைவேந்தராகப் பணியாற்றுமாறு பேராசிரியர் எஸ்.மோகனதாஸை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு கேட்டிருக்கிறது. பேராசிரியர் மோகனதாஸின் துணைவேந்தர் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது தெரிந்ததே. (ஐ-3)

## கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இட்ட கடற்படையினர் அங்கிருந்து நெடுந்தீவுக்குத் திரும்ப அவற்றை அனுமதித்தனர்.

படகுகள் நெடுந்தீவுக்குத் திரும்பும் பயண வழி நெடுகிலும் கடற்படைப் படகுகள் ரோந்தில் ஈடுபட்டுப் பாதுகாப்பு வழங்கின. இந்தப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் அந்தப் படகு கடற்படையினருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு தமிழகப் பக்கமாகத் தப்பிச் சென்றுவிட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-111)

## ஐந்து தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரைக்குப் படகில் தாங்கள் அனுப்பிவைக்கப் போகிறார்கள் என வடமராட்சி மீனவர்கள் தெரிவித்தனர். கடற்படையினர் இதில் தலையிட வேண்டிய அவசியம் எழவில்லை என்று மீனவர் சங்கத்தின் தலைவர் ஜோன் பொஸ்கோ தெரிவிக்கிறார்.

இலங்கைப் பொலீஸாரிடமோ அல்லது இலங்கை கடற்படையினரிடமோ தாங்கள் ஒப்படைக்கப்பட்டால் பல்வேறு சட்டத் தொல்லைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்றும் தமிழக மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதனால், மனிதநேயம் கருதி அவர்களை வந்த படகிலேயே தமிழகத்துக்கு திருப்பி அனுப்புவதற்கு மீனவர் சங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. தமிழக மீனவர்களை தமிழகத்துக்கு அனுப்ப மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஏற்பாடு செய்துகொண்டிருக்கையில் மீண்டும் அங்கு வந்த படையினர் ஐந்து மீனவர்களையும் பலவந்தமாக அழைத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு, ஜெகதாப் பட்டணத்தைச் சேர்ந்த ஆர்.ராஜா(வயது 42), இ.பாபு (வயது 27), ஐ.நாகராஜ்(வயது 27), ஆ. மாணிக்கவேலு(வயது 52), கோ.குப்பு குப்பு ராஜ்(வயது 43) ஆகிய மீனவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமுகமானதை அடுத்து இறுதி வருட மாணவர்களுக்குரிய விரிவுரைகள் கடந்த 8 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டன. மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று திங்கட்கிழமை முதல் தொடங்க உள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை -

ஏனைய வருட (முதலாம், இரண்டாம்) மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் ஆரம்பமாகும் என்று நேற்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சகல வருட மாணவர்களும் புதன்கிழமை விரிவுரைகளுக்குத் திரும்புவர். அன்று முதல் கல்விச் செயற்பாடுகள் முழு அளவில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)


## தமிழ் ஆசிரியர் பணிநிலை வேண்டுகை

**தொல்காப்பியம் உட்பட, தமிழ் இலக்கணத்தைத் தெளிவாகக் கற்பிக்கக்கூடிய ஆசிரியரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆசிரியப் பணியில் பத்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.**

**வயதெல்லை :40-60**

**யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களில் பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.**

**வன்னியில் தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படும்.**

**மாதந்தோறும் 20, 000 உரூபாவிற்குக் குறையாமல் சம்பளம் வழங்கப்படும்.**

**விண்ணப்ப முடிவு திகதி: 2006.03.20**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

**மே/பா: ஆசிரியர்,**

**உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.**

(சி-48313)



IIS

COMPUTER COURSES

சர்வதேச தரமும் முழுமையான அங்கீகாரமும் உள்ள கற்கைநெறிகள் விரைவில் அறிமுகம்

விபரம் : 14ஆம் திகதிய உதயனில்



IIS

விசேட பிரிவுகள் ஆரம்பம்

Eng. Drawing & Auto CAD

14.03.2006 (10.00மணி)

மாணவர்கள், உத்தியோகத்தர்களின் வசதிகளுக்கேற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்

இயக்குநர்

IIS, யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்கள்

### ஐயம்பிள்ளை அன்னப்பிள்ளை (அன்னக்கா)

வடமராட்சி கிழக்கு, அம்பன் குடத்தனையை நிரந்தர வசிப்பிடமாகவும் கிளி/கண்டாவளை, பத்தன் மோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஐயம்பிள்ளையின் (மூத்ததம்பி) அன்பு மனைவியும் வேலாயுதம்பிள்ளையின் பாசமிகு தாயும், நாகேஸ்வரியின் (நேசக்கா) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு அம்பன் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஐ.வேலாயுதம்பிள்ளை (மகன்).

(சி-48314)(30)

### திருமதி அப்புத்துரை சின்னம்மா

இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை சின்னம்மா அவர்கள் நேற்று (12.03.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் தனலட்சுமி (கனடா), அரியபூலன் (ஜேர்மனி), பாக்கியலட்சுமி (இருபாலை) ஆகியோரின் அன்புத் தாயும் பரராசசிங்கம் (கனடா), யோகேஸ்வரி (ஜேர்மனி), விநாயகமூர்த்தி (வாணி புத்தகசாலை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கண்ணம்மா மற்றும் செல்லம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இருபாலை கிழக்கு. இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(மருமகன் - மோட்டார் சைக்கிள் மெக்கானிக், இருபாலை).

**இருபாலை கிழக்கு,**
**இருபாலை.** (சி-48315)(30)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

# மாதிரி வினாப்பத்திரம்

வெளியீடு 01

## கணக்கீடு II பகுதி II

திரு. D.Sam - யாழ்.

*அறிவுறுத்தல் :*

- ❖ *முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.*
- ❖ *ஒவ்வொரு விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.*
- ❖ *ஒவ்வொரு விடையுடனும் பொருத்தமான செயன்முறைகள் இணைக்கப்படல் வேண்டும்.*

1. (அ) (i) கம்பனியின் பிரசுர முடிவுக் கணக்குத் தயாரிப்பதில் தாக்கம் செலுத்தும் இரண்டு காரணிகளைத் தருக.
(ii) கணக்கீட்டுக் கொள்கைகள் என்ற பதத்தை உதாரணம் மூலம் விளக்குக..
(iii) கம்பனியின் ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் நிதிக் கூற்றுக்கள் எவை?
(iv) இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கமைய பின்வரும் பதங்களை வரையறுத்துரைக்குக.
- அடிப்படைப் பிழைகள்
- ஐந்தொகைக்குப் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள் (05 புள்ளிகள்)

(ஆ) வரையறுக்கப்பட்ட சம்பத் நிறுவனம், தயாரிக்கப்பட்ட ஆடைகள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனியாகும். கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் 16 மில்லியனாகும். இது ஒவ்வொன்றும் ரூபா 10 கொண்ட 1 000 000 சாதாரண பங்குகளையும் வழங்கி 5 வருடங்களின் பின்னர் எந்த வேளையிலும் ரூபா 2 வட்டத்துடன் மீட்கப்படக்கூடிய ஒவ்வொன்றும் ரூபா-10 கொண்ட 6% 600 000 முன்னுரிமைப் பங்குகளையும் கொண்டதாகும்.

31 மார்ச் 2006 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழ்வருமாறு காணப்பட்டது.

| | வரவு ரூபா '000 | செலவு ரூபா '000 |
|---|---|---|
| சாதாரண பங்குகள் | | 4 778.4 |
| முன்னுரிமைப் பங்குகள் | | 2 000 |
| பங்குவட்டம் | | 1 600 |
| 12% தொகுதிக் கடன்கள் | | 1 600 |
| **சொத்துக்கள், விருட்சங்கள், உபகரணங்கள்** | | |
| இறையிலி நிலம் | 7 000 | |
| கட்டடங்கள் | 3 200 | 1 280 |
| அலுவலக உபகரணங்கள் | 1 600 | 640 |
| மோட்டார்வாகனம் | 2 400 | 720 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1 200 | 360 |
| ஆரம்பச் செலவுகள் | 600 | |
| நன்மதிப்பு | 540 | |
| 2005.04.01 இல் இருப்பு | 360 | |
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள காசும் | 20 | 49.6 |
| கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் | 480 | 272 |
| அறவிடமுடியாக் கடனும் ஐயக்கடன் ஏற்பாடும் | 24 | 48 |
| கொள்வனவுகளும் விற்பனைகளும் | 8 572 | 14 610 |
| கொள்வனவுத் திரும்பல்களும் விற்பனைத் திரும்பல்களும் | 84 | 32 |
| நிர்வாகச் சம்பளம் | 560 | |
| விளம்பரம் | 720 | |
| மின்சாரம் | 144 | |
| தொலைபேசியும் தபாலும் | 192 | |
| வங்கிக் கட்டணம் | 54 | |
| உள்வந்த கூலிகள் | 240 | |
| விற்பனை விநியோகச் செலவீடுகள் | 468 | |
| நிலையான வைப்பு மீதான வட்டி | | 20 |
| நிலையான வைப்பு (10% வட்டியில்) | 400 | |
| பணிப்பாளர் படிகள் | 440 | |
| பொது ஒதுக்கம் | | 336 |
| இலாப நட்டக் கணக்கு | | 680 |
| வருமானவரி ஏற்பாடு 2004/2005 | | 76 |
| வருமானவரி | 320 | |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | | 400 |
| 12% தொகுதிக்கடன்கள் வட்டி | 184 | |
| பாதிப்படைந்த கட்டடத்தின் மீது பெற்றுக்கொண்ட அறவீடு | | 300 |
| | 29 802 | 29 802 |

மேலதிகத் தகவல்கள் :

(i) 31.03.2006 இல் இருப்புக்கள் ரூபா 440 000 ஆகக் காணப்பட்டது.

(ii) கம்பனியானது வருமானவரியை காலாண்டடிப்படையில் செலுத்துகிறது. 2004/2005 க்கான செலுத்தப்படவேண்டிய மீதி வருமானவரி ரூபா 96 000 என ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்தொகை குறித்த காலத்தின் போது செலுத்தப்பட்டது. நடைமுறை ஆண்டிற்கான இறுதிக் காலாண்டின் வரிப் பொறுப்பு ரூபா 112 000 ஆக மதிப்பிடப்பட்டது.

(iii) சுற்றாடல் அதிகார சபை ரூபா 400 000 பெறுமதியான பாதிப்புக் கோரிக்கையை முன்வைத்து கம்பனிக்கெதிராக ஒரு வழக்கு பதிவுசெய்து கொண்டது. இந்த வழக்குத்தொடர்பான தீர்ப்பு யாதென இதுவரை தெரியவில்லை.

(iv) சொத்துக்கள், விருட்சங்கள் மற்றும் உபகரணங்களினது பெறுமானத் தேய்வு தொடர்பான கம்பனியின் கொள்கை கீழ்வருமாறு.
கட்டடங்கள் கிரயத்தில் வருடமொன்றிற்கு 10%
அலுவலக உபகரணங்கள் கிரயத்தில் வருடமொன்றிற்கு 15%
தளபாடமும் பொருத்திகளும் கிரயத்தில் வருடமொன்றிற்கு 20%
மோட்டார் வாகனம் கிரயத்தில் வருடமொன்றிற்கு 20%

(v) விநியோகத்தர் ஒருவருக்கு எழுதப்பட்ட ரூபா 14 000 க்கான காசோலை ஒன்று தொழில்நுட்பப் பாதிப்புக் காரணமாக 01.04.2006 லன்று வங்கியால் மறுக்கப்பட்டது.

(vi) வருடத்திற்கான அறவிடமுடியாக்கடன் மொத்தம் ரூபா 32 000 த்தை பதிவழிப்பதென தீர்மானிக்கப்பட்டது. ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு அறவிடமுடியாக்கடன் பதிவழித்ததன் பின்னர் மீதிக் கடன்பட்டோரில் 10% மாக சீராக்கப்படல் வேண்டும்.

(vii) பலத்த மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவினால் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் பாதையின் ஓரத்தில் அமைந்திருந்த சிறிய அலுவலகக் கட்டடம் ஒன்று அழிக்கப்பட்டது. அழிக்கப்பட்ட கட்டடத்தினது கிரயமானது ரூபா 800 000 ஆகக் காணப்பட்டதுடன், பெறுமானத் தேயவு ஏற்பாடு ரூபா 160 000 ஆகவும் காணப்பட்டது. காப்புறுதிக் கம்பனி சேதத்திற்காக ரூபா 620 000 ஐச் செலுத்துவதாக ஏற்றுக்கொண்டது. இதன் ஒரு பகுதியை 2005 பெப்ரவரியில் செலுத்த வேண்டியிருந்தது. கணக்குப்பதிவாளர் செலுத்தப்பட்ட வரியை, காப்புறுதி அறவீடு பெற்ற கணக்கில் வரவு வைத்ததுடன் இது தொடர்பாக வேறு எந்த ஒரு பதிவினையும் மேற்கொண்டிருக்கவில்லை.

(viii) கம்பனியானது 2006 மார்ச் 28 ஆம் திகதியன்று பட்டியலிடப்பட்ட பெறுமதியான ரூபா 352 000 ற்கு விற்பனையின்றேல் திருப்பியனுப்புக எனும் அடிப்படையில் ஒரு வாடிக்கையாளருக்கு சில பொருட்கள் அனுப்பப்பட்டன. அப் பொருட்களுக்கான திருப்பியனுப்பக்கூடிய காலம், இன்னும் முடிவடையவில்லை. வாடிக்கையாளர் பொருட்களின் ¼ பங்கு, 2005 மார்ச் 31 இலன்று விற்கப்பட்டு விட்டதாகஅறிவித்தார். கிரயத்தில் 20% தினை சேர்த்து பட்டியலிடுவது கம்பனியின் கொள்கையாகும்.

(ix) 2006 மார்ச் 31 ஆம் திகதியில் இயக்குநர்கள் பின்வருவனவற்றை ஏற்படுத்துவதற்கு தீர்மானித்தனர்
- பொது ஒதுக்கத்திற்கு ரூபா 80 000 ஐ மாற்றுவதற்கு
- சாதாரண பங்குகளில் 10% இறுதிப் பங்கிலாபத்தைச் செலுத்துவதற்கும், முன்னுரிமைப் பங்குகளுக்கான பங்கிலாபக் கொடுப்பனவுக்கும்.
- இலாபத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியத்தின் மூலம் முன்னுரிமைப் பங்கின் 1/10 பங்கினை மீட்டல்.
- ஆரம்பச் செலவீடுகளில் 10% த்தைப் பதிவழித்தல்.

*வேண்டப்படுவது :*
பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவில் பின்வருவனவற்றைத் தயாரிக்குக.
(1) 2006 மார்ச் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கு இலாப நட்டக் கணக்கு
(2) 2006 மார்ச் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கு உரிமை மூலதன மாற்றங்களைக் காட்டும் கூற்று.
(3) 2006 மார்ச் 31 இல் ஐந்தொகை.
(பங்கிலாப வரி 10%)

(15 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

2. (அ) வரையறுத்த மதன் கம்பனியின் சாதாரண பங்கு 40 000 இற்கான விண்ப்பங்களை அழைப்பதற்கு பணிப்பாளர் தீர்மானித்தனர். இதற்கு கீழ்வரும் முறைப்படி பணம் பெறப்படும்.

| | |
|---|---|
| விண்ணப்பம் | ரூபா 5 |
| ஒதுக்கலின் போது | ரூபா 4 |
| முதல் அழைப்பு | ரூபா 3 |
| இறுதி அழைப்பு | ரூபா 3 |

54 000 பங்குகளுக்கான விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதுடன் சரியாகப் பூரணப்படுத்தாத 4 000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. கம்பனியின் ஊழியர்கள் 20 000 பங்குகளுக்கு விண்ணப்பித்ததுடன் அவர்களுக்கு 100% ஒதுக்கப்பட்டது. மிகுதிப் பங்குகள் விகிதாசாரப்படி ஒதுக்கப்பட்டன. கம்பனி முதல் அழைப்பை அழைத்ததுடன் அதற்காக கீழ்வருமாறு பணம் கிடைக்கப்பெற்றது.

- 100% ஒதுக்கப்பட்டவர்களுக்கு
  - 19 000 ஒதுக்கப்பட்டவருக்கு பங்கொன்று ரூபா 12 படியும்
  - 1 000 ஒதுக்கப்பட்டவருக்கு பங்கொன்று ரூபா 9 படியும்
- விகிதாசாரப்படி ஒதுக்கப்பட்டவர்களுக்கு
  - 18 000 ஒதுக்கப்பட்டவருக்கு பங்கொன்று ரூபா 12 படியும்
  - 1 400 ஒதுக்கப்பட்டவருக்கு பங்கொன்று ரூபா 9 படியும்
  - 600 ஒதுக்கப்பட்டவருக்கு பங்கொன்று ரூபா 7.50 படியும்

*வேண்டப்படுவது :*
(1) ஒதுக்கல் நிலையில் ஒதுக்கல் தொடர்பாகப் பெறப்பட வேண்டிய காசு
(2) ஒதுக்கலில் பெறப்பட்ட மொத்தக் காசு
(3) அழைப்பு நிலுவைத் தொகையைக் காட்டுக
(4) இப் பங்குவழங்கலில் பெறப்பட்ட மொத்தப் பணம்
(5) மேலே கூறப்பட்ட பங்கு வழங்கலைப் பதிவதற்கான (காசு தவிர) நாட்குறிப்புப் பதிவு
(05 புள்ளிகள்)

(ஆ) மேலே கூறப்பட்ட பங்குவழங்கல் தொடர்பில் இயக்குநர் சபை ஊழியர்களின் பங்குகளைப் பறிமுதல் செய்யத் தீர்மானித்ததுடன், இப் பங்குகளை பங்கொன்று ரூபா 8 வீதம் முழுதும் பங்குகளாக மீளவழங்கத் தீர்மானித்தனர். இவ் மீளவழங்கல் மேற்கொள்ளப்பட்டு காசு உரிய முறையில் பெறப்பட்டது.

(01 புள்ளிகள்)

*வேண்டப்படுவது :*
பறிமுதலும் மீளவழங்கலும் கணக்கு

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் இன்படி விளக்குக,
(i) தேய்மானம் (ii) தேய்மானமிடத்தக்க தொகை
(iii) நிகழத்தக்க பரிப்பு (iv) பழுவேறிய ஒப்பந்தம் (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

3. (அ) அமலதாஸ் லிமிட்டடின் முதலாம் வருட நிதிக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

2004டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனை | | 480 000 |
| கழி : விற்பனைக் கிரயம் | | |
| கொள்வனவுகள் | 400 000 | |
| இறுதியிருப்பு | (200 000) | (200 000) |
| மொத்தலாபம் | | 280 000 |
| கழி : பெறுமானத் தேய்வு | | 60 000 |
| விற்பனைச் செலவுகள் | | 80 000 |
| ஏனைய செலவுகள் | | 8 400 |
| வட்டி | | 131 600 |
| தேறியலாபம் | | 59 600 |
| வரி | | 72 000 |
| வரிக்குப்பின் தேறிய இலாபம் | | |

2004டிசெம்பர் 31 இல் ஐந்தொகை

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | |
| பொறியும் உபகரணமும் | | 140 000 |
| கழி : பெறுமானத் தேய்வேற்பாடு | | 160 000 |
| | | 80 000 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| இருப்பு | 200 000 | |
| கடன்பட்டோர் | 120 000 | |
| முதலீடு | 48 000 | |
| காசு | 40 000 | |
| | 408 000 | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | |
| கடன்கொடுத்தோர் | 100 000 | 308 000 |
| | | 388 000 |
| பின்வருமாறு நிதியிடப்படுகிறது | | |
| பங்கு மூலதனம் | | |
| ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன சாதாரண பங்குகள் | | 100 000 |
| ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன 5% முன்னுரிமைப் பங்குகள் | | 40 000 |
| இலாபநட்டக் கணக்கு | | 72 000 |
| வங்கிக் கடன் | | 176 000 |
| | | 388 000 |

*வேண்டப்படுவது :*

(1) நேரில் முறையைப் பயன்படுத்தி 2004 டிசெம்பர் 31 ஆந் திகதியின் வருட முடிவிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்குக .(04 புள்ளிகள்)

(2) பின்வரும் விகிதங்களைக் கணிப்பிடுக.
- (i) வட்டிக் காப்பு விகிதம்
- (ii) நடப்பு விகிதம்
- (iii) விரைவு விகிதம்
- (iv) பங்கொன்றின் உழைப்பு
- (v) கடன்பட்டோர் வசூல் காலம்
- (vi) கடன்கொடுத்தோர் தீர்வுக் காலம் (03 புள்ளிகள்)

(ஆ) 1999 ஏப்ரல் 01 அன்று ஓர் இயந்திரம் ரூபா 2 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 10 வருடங்களின் முடிவில் கழிவுப் பெறுமதி எதுவும் இருக்காது எனவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு நேர்கோட்டுமுறையில் தேய்விடப்பட்டது.

2004 ஏப்ரல் 01 இல் இயந்திரமானது ரூபா 1 600 000 என மறுமதிப்பீடு செய்யப்பட்டது. ஆயுட்காலத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இயந்திரமானது 2006 மார்ச் 31 அன்று ரூபா 100 000 ற்கு விற்கப்பட்டது.

*வேண்டப்படுவது:*

இலங்கைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 18 "ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணமனைபதற்கமைய 2006 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக் கணக்குகளில் செய்யவேண்டிய சீராக்கங்கள் யாவை? (03 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)

4. (அ) (i) களஞ்சியக் காப்பாளரின் கடமைகள் எவை?
- (ii) கிரயக் கணக்கீட்டிற்கும், முகாமைக் கணக்கீட்டிற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
- (iii) பந்தய அட்டை என்றால் என்ன?
- (iv) உரிய நேரத் தந்திரோபாயம் (JIT)என்றால் என்ன?
- (v) நேரப் பதிவை மேற்கொள்ள பயன்படும் இரண்டு ஆவணங்கள் தருக.
- (vi) வேலை நேரப் பதிவை மேற்கொள்ள பயன்படும் இரண்டு ஆவணங்கள் தருக. (03 புள்ளிகள்)

(ஆ) லீயோன் நிறுவனத்தின் ஜனவரி மாத சம்பளப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன. இச் சம்பளப் பட்டியலில் மதன், மன்மதன், ஜெனனி, ராணி, பிலிப் ஆகிய ஐந்து ஊழியர்கள் உள்ளனர்.
- (i) மொத்தச் சம்பளம் ரூபா 120 000
- (ii) ராணி, பிலிப் ஆகியோரிடம் முறையே ரூபா 3 000, ரூபா 2 000 சம்பள முற்பணம் கழிக்கப்படல் வேண்டும்.
- (iii) ஜெனனி தனது வீட்டு வைபவமொன்றிற்கு கம்பனியிடமிருந்து ரூபா 10 000 கடன் ஒன்றைப் பெற்றிருந்தார். 10 மாதங்களில் சம தொகைகளாக அவரது மாதாந்த சம்பளங்களிலிருந்து கழிக்கப்படும். 01 ஜனவரியில் அவரது கடன் கணக்குத் ரூபா 3 000 ஆகும்.
- (iv) மதன், மன்மதன் ஆகியோர் சிலிங்கோ நிறுவனத்தில் பெற்ற வீடமைப்புக் கடன் தொடர்பாக அவர்களது சம்பளத்தில் ரூபா 1 6000 படி கழித்து சிலிங்கோ நிறுவனத்திற்கு அனுப்புதல் வேண்டும். .
- (v) ஊழியர் சேமலாபநிதியில் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் 10%, வேலை கொள்வோன் 15% பங்களிப்பாகும்.

*வேண்டப்படுவது :*

சம்பளப் பட்டியலிலுள்ள விடயங்களை கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்படுகின்றது எனக் கொண்டு பொதுப் பேரேட்டில் பதிவு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. (03 புள்ளிகள்)

(இ) (i) பின்வரும் தகவல்களிலிருந்து கூலியைக் கணிப்பிட்டுக் காட்டுக.

| நாட்கள் | வேலைசெய்த நேரம் |
|---|---|
| திங்கள் | 8 |
| செவ்வாய் | 10 |
| புதன் | 9 |
| வியாழன் | 11 |
| வெள்ளி | 9 |
| சனி | 4 |

சாதாரண வேலை நேரம் 8 மணித்தியாலமாகும்.

வழமையான மணிக் கூலி ரூபா 60

மேலதிக நேரக் கொடுப்பனவு : 9 மணித்தியாலம் வரை வழமையான கூலிப்படியும் அதற்கு மேல் வழமையான கூலியின் 2 மடங்கும்

(ii) பின்வருவனவற்றிற்கான சமன்பாடுகளைத் தருக.
- (1) கல்சி முறையில் மிகையூதியம்
- (2) கல்சிவெயர் முறையில் மிகையூதியம் (04 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)

5. (அ) (i) சிக்கன கட்டளை மட்டம் என்பதால் விளங்கிக் கொள்ளப்படுவது யாது? சிக்கன கட்டளை மட்டம் தீர்மானிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய மூன்று எடுகோள்களைக் குறிப்பிடுக.

(ii) குறித்ததொரு பொருள் தொடர்பாக கீழ்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு,
- (1) மறுகட்டளையிடும் மட்டம்
- (2) மறு கட்டளைத் தொகை

ஆகியவற்றைக் கணிப்பிடுக.

ஆகக் கூடிய சரக்கிருப்பு மட்டம் அளவு 20 000

ஆகக் குறைந்த மாதாந்த நுகர்வு அளவு 2 000

ஆகக் கூடிய மாதாந்த நுகர்வு அளவு 4 000

பாரப்படுத்த வேண்டிய காலம் 02 – 04 மாதங்கள் (03 புள்ளிகள்)

(ஆ) சாமி உற்பத்திக் கம்பனியின் 2005 ஜனவரி முதல் வாரத்திற்கான கையிருப்புக் கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு :

ஜனவரி 1 இல் கையிருப்பு 600 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 10

ஜனவரி 3 இல் ஒவ்வொன்றும் ரூபா 12 வீதம் 500 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஜனவரி 3 இல் விநியோகம் 800 அலகுகள்

ஜனவரி 4 இல் ஒவ்வொன்றும் ரூபா 16 வீதம் 200 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டன.

ஜனவரி 5 இல் 4 இல் கொள்வனவு செய்யப்பட்டதில் 100 அலகுகள் வழங்குநருக்கு திருப்பியனுப்பப்பட்டது.

ஜனவரி 6 இல் விநியோகம் 300 அலகுகள்

*வேண்டப்படுவது :*

முதல் வந்தது முதல் செல்லல் (FIFO) என்ற முறையில் இருப்புப் பேரேட்டினைத் தயாரிக்குக. (02 புள்ளிகள்)

(இ) வரையறுக்கப்பட்ட அமுர்தாப் கம்பனி மூன்று உற்பத்தித் திணைக்களங்களையும், சேவைத் திணைக்களம் ஒன்றையும் கொண்ட கம்பனியாகும். மேந்தலைகள் வருமாறு :

| | |
|---|---|
| தொழிற்சாலை வாடகை | ரூபா 100 000 |
| இயந்திரப் பெறுமானத் தேய்வு | ரூபா 32 000 |
| ஒளியூட்டலும் வெப்பமும் | ரூபா 16 000 |

| | திணைக்களம் | | | |
|---|---|---|---|---|
| | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | உற்பத்தி 3 | சேவை |
| நேரில் கூலிகள் | ரூபா 24 000 | ரூபா 40 00 | ரூபா 10 000 | ரூபா 10 000 |
| நிலப் பரப்பு – சதுர மீற்றர் | 800 | 600 | 400 | 200 |
| கனவளவு – கன மீற்றர் | 400 | 100 | 100 | 200 |
| இயந்திரப் பெறுமதி | ரூபா 200 000 | ரூபா 100 000 | ரூபா 100 000 | - |
| கூலி மணிமியாலம் | 4 800 | 8 800 | 9 600 | - |

சேவை திணைக்கள மேந்தலை சமவிகித அடிப்படையில் உற்பத்தித் திணைக்களங்களுக்கிடையில் பகிரப்பட வேண்டும்.ஒவ்வொரு திணைக்களத்திலும் சேர்ட், பெனியன் ஆகிய இரு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேந்தலைகளானது நேர்க்கூலி மணி அடிப்படையில் உள்ளடக்கப் படுகிறது.

ஓர் அலகு சேர்ட், பெனியன் தொடர்பான கூலி மணி விபரம்,

| | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | உற்பத்தி 3 |
|---|---|---|---|
| சேர்ட் | 6 மணி | 4 மணி | 2 மணி |
| பெனியன் | 2 மணி | 2 மணி | 2 மணி |

*வேண்டப்படுவது :*

(1) மேந்தலைக் கிரயத்தை ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பங்கீடு செய்தல்.

(2) சேவை திணைக்களத்தின் மொத்த மேந்தலைக் கிரயத்தை உற்பத்தித் திணைக்களங் களுக்கிடையில் மறுபங்கீடு செய்தல்.

(3) சேர்ட்டொன்றின் மூலக் கிரயம் ரூபா 600 பெனியன் ஒன்றின் மூலக் கிரயம் ரூபா 200 எனின் ஒவ்வொன்றினதும் உற்பத்திக் கிரயத்தைக் கணக்குக.(05 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)

6. (அ) எல்லைக் கிரயத்தைத் தொடர்புபடுத்தி விளக்குக,
- (i) P/V (இலாப அளவு) விகிதம்
- (ii) பாதுகாப்பு எல்லை (01 புள்ளி)

(ஆ) பூச்சட்டி தயாரிக்கும் ஒரு நிறுவனத்திலிருந்து பின்வரும் தகவல்கள் எடுக்கப்பட்டன.

| | |
|---|---|
| ஒரு பூச்சட்டியின் விற்பனை விலை | ரூபா 100 |
| ஒரு பூச்சட்டியின் மாறும் கிரயம் | ரூபா 80 |
| மொத்த நிலையான கிரயம் | ரூபா 2 000 |
| உண்மையான விற்பனை அலகுகள் | 160 |

பின்வருவனவற்றைக் கணிக்க.
- (i) அலகுக்கான பங்களிப்பு
- (ii) மொத்தப் பங்களிப்பு
- (iii) சமப்பாட்டுப்புள்ளி அலகுகளையும், பெறுமதியையும் தருக.
- (iv) பாதுகாப்பு எல்லையைக் கணிக்க.
- (v) சமப்பாட்டு வரையைக் கீறுக. (02 புள்ளிகள்)

(இ) குறிப்பிட்ட கால எல்லைக்குள் பீற்றா என்னும் பொருள்களில் 15 000 அலகுகள் உற்பத்தி செய்து விற்கப்பட்டது. அது தொடர்பான வருமான,கிரயப் பாய்ச்சல் பின்வருமாறு :

| | |
|---|---|
| விற்பனை | ரூபா 150 000 |
| மாறும் உற்பத்திக் கிரயம் : | ரூபா 52 500 |
| நிலையான பொதுக் கிரயம் | ரூபா 22 500 |
| நிலையான நிலையைப் பங்கீட்டுக் கிரயம் | ரூபா 37 500 |
| மாறும் நிலைப் பங்கீட்டுக் கிரயம் | ரூபா 7 500 |

*வேண்டப்படுவது :*

எல்லைக் கிரய அடிப்படையில் வருமானக் கூற்று (03 புள்ளிகள்)

(ஈ) XY கம்பனி A,B என்னும் இரு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதில் முதலீடு பற்றிச் சிந்திக்கிறது. A இயந்திரம் ரூபா 50 000 உம், B இயந்திரம் ரூபா 80 000 உம் பெறுமதி கொண்டவையாகும். முகாமையாளர்கள் இந்த இரு இயந்திரங்களின் எதிர்பார்ப்பு தேறிய காசுப்பாய்ச்சல் (வரி, தேய்வு என்பவற்றிற்குப் பின்) பின்வருமாறு இருக்குமென மதிப்பீடு செய்தனர்.

வரியும், தேய்வும் கழித்தபின் தேறிய காசுப் பாய்ச்சல் :

| ஆண்டு | A இயந்திரம் | B இயந்திரம் |
|---|---|---|
| 0 | – 50 000 | – 80 000 |
| 1 | 20 000 | 40 000 |
| 2 | 30 000 | 30 000 |
| 3 | 10 000 | 10 000 |
| 4 | 10 000 | 10 000 |

பின்வருவனவற்றைக் கணிக்க :

(1) முதலீடு திரும்பிவரும் கால அடிப்படையில் இயந்திரத்தைத் தெரிவு செய்க.

(2) NPV தேறிய இற்றைப் பெறுமதியின்படி எந்த இயந்திரம் தெரிவுசெய்யப்படலாம்.(10% இல்)

(04 புள்ளிகள்) (மொத்தம் 10 புள்ளிகள்)

## விடைக் குறிப்புகள் கணக்கீடு I பகுதி II

வெளியீடு 01

(இ)(i)(1)

நட்டஈட்டுக் கோரிக்கை

| | ரூபா |
|---|---|
| ஆரம்பவிருப்பு | 40 000 |
| கொள்வனவு | 132 000 |
| வி/இ/ச/கி | 172 000 |
| வி/ச/கி | (158 400) |
| இருக்க வேண்டிய சரக்கு | 13 600 |
| மீட்டசரக்கு | (12 500) |
| அழிந்த சரக்கு | 1 100 |

(2)

மீட்கப்பட்ட சரக்குக் க/கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| கொள்வனவு | 12 500 | பற்று | 10 800, |
| | | இலாப நட்டக் க/கு | 1 700 |
| | 12 500 | | 12 500 |

அழிக்கப்பட்ட சரக்குக் க/கு

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| கொள்வனவு | 1 100 | நட்ட ஈட்டுக் கம்பனி | 660 |
| | | இலாப நட்டக் க/கு | 440 |
| | 1 100 | | 1•100 |

(ii)

வங்கிக் கணக்கிணக்கக் கூற்று

| | + | – | மீதி |
|---|---|---|---|
| காசேட்டின்படி வங்கி மீதி | | | 3 500 |
| சமர்ப்பிக்கப்படாத காசோலை | 1 300 | | |
| வசூலிக்கப்படாத காசோலை | | 1 5 00 | |
| வங்கிக் கட்டணம் | | 2 50 | |
| நிலையான காப்புறுதி | | 700 | |
| | 1 300 | 2 450 | (1 150) |
| வங்கிக் கூற்றின்படி மீதி | | | 2 350 |

## விடைக் குறிப்புகள் கணக்கீடு II பகுதி I

வெளியீடு 01

| | | | |
|---|---|---|---|
| 1. (3) | 16. (2) | 30. ஊழியரின் எண்ணிக்கையை அதிகமாக | |
| 2. (3) | 17. (4) | 31. மேலதிக வேலை நேரம் | 32. நிதியிடல் |
| 3. (2) | 18. (1) | 33. தனி மனிதன் | 34. ஆண்டறிக்கையுடன் |
| 4. (1) | 19. (2) | 35. பெறுமானத் தேய்வு | 36. கிரயம் |
| 5. (1) | 20. (1) | 37. நிதிக் கூற்று | 38. கணக்கீட்டு விகிதாசாரம் |
| 6. (2) | 21. (4) | 39. A – 2 000, 300,75% | |
| 7. (2) | 22. (1) | B – 1 500, 1 800, 25% | |
| 8. (3) | 23. (4) | C – 300, 0, 30% | |
| 9. (3) | 24. (5) | D – 900, 1 200, 300. | |
| 10. (1) | 25. (4) | | |
| 11. (2) | 26 (4) | | |
| 12. (2) | 27. (4) | 40. ஆம் | |
| 13. (2) | 28 (1) | | |
| 14. (1) | 29. (5) | | |
| 15. (3) | | | |

**(கணக்கீடு II பகுதி II விடைக்குறிப்புகள் 20.03.2006ஆம் திகதிய கல்விச்சுடரில்)**